# ஆண்டறிக்கை

# 2015

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை

# நோக்கு

சிறுவர்களுக்கு உகந்ததும், பாதுகாப்பானதுமான சூழலொன்றை கட்டியெழுப்புதல்.

# செயற்பணி

சிறுவர்கள் சகல வகையிலுமான துஷ்பிரயோகங்களில் இருந்தும் விடுதலை பெற்றிருப்பதை உறுதிசெய்தல்.

## 2015 ஆம் ஆண்டின் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் பணிப்பாளர் சபை

| | |
|---|---|
| சட்டத்தரணி திருமதி அனோமா திசாநாயக்க 2015.01.08 | தவிசாளர்,<br>தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை,<br>இல. 330, தலவத்துகொட வீதி,<br>மாதிவெல, ஸ்ரீ ஜயவர்த்தனபுர |
| சட்டத்தரணி திருமதி சுஜாதா குலதுங்க 2015.01.08 | பிரதி தவிசாளர்,<br>தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை,<br>இல. 330, தலவத்துகொட வீதி,<br>மாதிவெல, ஸ்ரீ ஜயவர்த்தனபுர |
| கலாநிதி திருமதி நடாஷா பாலேந்திரா<br>2015 பெப்ரவரி மாதம் முதல் | தவிசாளர்,<br>தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை,<br>இல. 330, தலவத்துகொட வீதி,<br>மாதிவெல, ஸ்ரீ ஜயவர்த்தனபுர |
| சட்டத்தரணி திரு சஜீவ சமரநாயக்க<br>2015 பெப்ரவரி முதல் | பிரதி தவிசாளர்,<br>தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை,<br>இல. 330, தலவத்துகொட வீதி,<br>மாதிவெல, ஸ்ரீ ஜயவர்த்தனபுர |
| பேராசிரியர் திருமதி சமுத்ரா கத்ரியாரச்சி<br><br>டாக்டர் திரு எஸ்.பி. கந்தபொல<br>(2015 மார்ச் மாதம் முதல்) | உளவியல் மருத்துவ நிபுணர்<br>உளவியல் மருத்துவப்பிரிவு<br>ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்<br>நுகேகொடை<br><br>உளவியல் மருத்துவ நிபுணர்<br>ஆதார வைத்தியசாலை<br>கம்பஹா |
| பேராசிரியர் திருமதி மனோரி சேனாநாயக்க<br><br>டாக்டர் திருமதி எல்.டி. சில்வா<br>(2015 மார்ச் மாதம் முதல்) | சிரேஷ்ட சிறுவர் நோயியல் நிபுணர்,<br>மருத்துவ பீடம், கொழும்பு பல்கலைக்கழகம்,<br>கொழும்பு 07<br><br>சிறுவர் நோயியல் நிபுணர்,<br>கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை,<br>களுபோவில |
| டாக்டர் திரு பி.பீ. தசநாயக்க<br><br>டாக்டர் திரு யூ.ஏ.கே. தென்னக்கோன்<br>(2015 மார்ச் மாதம் முதல்) | நீதிமன்ற மருத்துவ அலுவலர்,<br>நச்சுயியல் மற்றும் சட்ட மருத்துவ நிறுவகம்,<br>இல. 111, பிரான்சிஸ் வீதி,<br>கொழும்பு 10 |
| கலாநிதி திரு ரீ. ஸ்வீந்திரன் | உளவியல் நிபுணர்,<br>இல. 6, பெரேரா மாவத்தை,<br>கொழும்பு 10 |
| திரு கே. வைத்தியரத்ன | மேலதிக சொலிசிடர் ஜெனரல்,<br>சட்டமா அதிபர் திணைக்களம்,<br>கொழும்பு 12 |

| | |
|---|---|
| திருமதி எம். யமுனா பெரேரா | ஆணையாளர்,<br>நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம்,<br>IIஆம் கட்டம், செத்சிறிபாய,<br>பத்தரமுல்லை |
| திரு ஹேரத் யாப்பா<br><br>திருமதி சாந்தனீ அமரதுங்க<br>(2015 மார்ச் மாதம் முதல்) | தொழில் ஆணையாளர் நாயகம்,<br>தொழில் திணைக்களம்,<br>கொழும்பு 05 |
| திருமதி ஆர்.கே.ஜி.டி. விஜேசிங்க | பணிப்பாளர்,<br>முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்,<br>நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு,<br>செயலகம்,<br>கொழும்பு 01 |
| திருமதி சிரோமி மாஸகோரால<br><br>திரு சிறிவர்த்தன தஹநாயக்க<br>(2015 நவம்பர் மாதம் முதல்) | அங்கத்தவர்,<br>இல. 4/10, வெலிகட வத்த,<br>ராஜகிரிய.<br><br>இல. 3280,<br>கட்டம்III,<br>அநுராதபுரம் |
| திருமதி பி.எம். அபேகோன்<br><br>திரு ஆர்.பி. அபேசிங்க<br>(2015 நவம்பர் மாதம் முதல்) | அங்கத்தவர்,<br>இல. 304, பௌத்தலோக மாவத்தை,<br>கொழும்பு 07<br><br>இல. 621/4,<br>கொடகே மாவத்தை,<br>அநுராதபுரம் |
| திரு ஏ.ஆர். வைத்தியலங்கார<br><br>திரு எம்.ஆர். லத்தீப்<br>(2015 மார்ச் மாதம் முதல்) | சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர்,<br>சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அலுவலகம்,<br>பொலிஸ் தலைமையகம்,<br>கொழும்பு 01 |
| திருமதி டி.எஸ். விஜேசேகர<br>(2015.11.17 முதல்) | மேலதிக செயலாளர்,<br>சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் அலுவல்கள் அமைச்சு,<br>இல. 175ஏ, நாவல வீதி,<br>நுகேகொடை |

**<u>2015 ஆம் ஆண்டு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் சபை உறுப்பினர்கள்</u>**

| | |
|---|---|
| திருமதி அனுஷா ஏ. முனசிங்க | சிரேஷ்ட உதவி செயலாளர்,<br>நீதி அமைச்சு,<br>கொழும்பு 12 |
| திருமதி ஆர்.எம்.ஐ. ரத்நாயக்க | மேலதிக செயலாளர்,<br>பாதுகாப்பு அமைச்சு,<br>சாரணர் மாவத்தை,<br>கொழும்பு 03 |
| திருமதி கே.டபிள்யு.ரீ.என். அமரதுங்க | மேலதிக செயலாளர்,<br>வெகுசன ஊடக மற்றும் தகவல் அமைச்சு,<br>இல. 163, கிருலப்பன மாவத்தை,<br>பொல்ஹேன்கொட,<br>கொழும்பு - 05 |
| திருமதி எம்.ஏ.எம். அரிபா<br><br>திரு மஹாதேவ<br>(2015 மார்ச் மாதம் முதல்) | ஆணையாளர்,<br>மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் பிரிவு,<br>தொழில் திணைக்களம்,<br>கொழும்பு 05 |
| திருமதி ஹேமா சிறிமவர்தன | மேலதிக செயலாளர்,<br>பொருளாதார அபிவிருத்தி அமைச்சு,<br>இல. 464, ரி.பி. ஜயா மாவத்தை,<br>கொழும்பு 10 |
| திருமதி யூ.எஸ்.கே. தெனாவத்த | சிரேஷ்ட உதவி செயலாளர்,<br>உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சு,<br>இல. 330, யூனியன் பிளேஸ்,<br>கொழும்பு 02 |
| திருமதி டி.எஸ். விஜேசேகர<br>(2015 நவம்பர் மாதம் முதல்) | மேலதிக செயலாளர்,<br>சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் அலுவல்கள் அமைச்சு,<br>இல. 175ஏ, நாவல வீதி,<br>நுகேகொடை |
| திருமதி எஸ்.ஏ.டி.எஸ. சுபசிங்க | சிரேஷ்ட உதவி செலயாளர், (நிருவாகம்)<br>சுகாதார பாதுகாப்பு மற்றும் போசணை அமைச்சு,<br>இல. 385, சங்கைக்குரிய பத்தேகம விமலவன்ச தேரோ மாவத்தை,<br>கொழும்பு 10 |
| திருமதி எஸ்.ஏ.டி.எஜ். சுபசிங்க | மேலதிக செலயாளர்,<br>சமூக சேவைகள் மற்றும் சமூக நலன்புரி அமைச்சு,<br>செத்சிறிபாய,<br>பத்தரமுல்லை. |
| திரு எச்.யூ. பிரேமதிலக்க | மேலதிக செலயாளர்,<br>கல்வி அமைச்சு,<br>இசுறுபாய,<br>பத்தரமுல்ல |

| உள்ளடக்கம் | பக்கம் |
|---|---|
| அறிமுகம் | 01-02 |
| தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் செயற்பணி | 03-04-05 |
| அதிகாரசபையின் ஒழுங்கமைப்பு | 05 |
| 2015 ஆண்டு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் நிறுவன ஒழுங்கமைப்பு | 06 |
| 2015-12-31 இல் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் பணிநிலை விபரங்கள் | 07-08 |
| அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் | |
| இணையத்தளம் மற்றும் தொலைபேசி ஊடாக சிறுவர்களுக்கு முறைகேடானவாறு அழுத்தம் கொடுக்கும் நபர்களுக்கு எதிராக செயற்படுவதற்கான செயலணியொன்றைத்தாபித்தல். | 08-09 |
| சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு புனர்வாழ்வளிக்கும் நடவடிக்கைகள் மற்றும் நலன்புரி நடவடிக்கைகளை மேற்கொள்ளல். | 10 |
| இல்லமயப்படுத்தப்பட்டுள்ள சிறுவர்களை திடீர் விபத்துக்களிலிருந்து தடுத்துக் கொள்வதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்றை நடாத்தல் | 10 |
| பாடசாலை சிறுவர் பாதுகாப்புக்குழுக்கள் | 10-11 |
| சிவில் அமைப்புக்களின் அங்கத்தவர்களை அறிவுறுத்தல் | 12 |
| சுகாதார தொழில்சார் வல்லுநர்கள் அறிவுறுத்தல் | 12-13 |
| தேசிய கல்விக் கல்லூரிகளின் ஆசிரிய மாணவர்களை அறிவுறுத்தல் | 14 |
| பிரான்ஸ் பொலிசாரினால் மேற்கொள்ளப்பட்ட விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டம் | 15 |
| சிறுவர் துன்புறுத்தலுக்கு எதிரான தேசிய தினம் | 16 |
| சிறுவர் ஊழியத்துக்கு எதிரான சர்வதேச தினக் கொண்டாட்டம் | 16-17 |
| சிறுவர் ஊழியத்துக்கு எதிரான சர்வதேச தினத்தை முன்னிட்டு நாடளாவிய ரீதியல் நடாத்தப்பட்ட கட்டுரைப்போட்டிகள் | 17-18 |
| உலக சிறுவர் தினத்தைக் கொண்டாடும் தேசிய நிகழ்ச்சித்திட்டம் | 18-19 |
| உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு பாடசாலை சிறுவர்களுக்கான போஸ்டர் ஆக்கப்போட்டியை நடாத்தல் | 19 |
| உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு “இடையீட்டுக் கல்வி மற்றும் சிறுவர் பாதுகாப்பு பற்றிய கொள்கை”சார் கலந்துரையாடலை நடாத்தல் | 20 |
| சர்வதேச சிறுமியர் தினம் | 20-21 |
| தகவல்களை பெற்றுக்கொடுத்தல் | 21 |
| கண்காட்சிகள் மற்றும் நடமாடும் சேவைகளை நடாத்துதல் | 22 |
| சிறுவர் பாதுகாப்பு சம்பந்தமான தகவல்களை வெகுசன ஊடகங்கள் ஊடாக மக்களுக்கு கொண்டு செல்லல் | 22-23 |
| லபெந்தி புவத் ஹசுன (செய்திச் சஞ்சிகை) | 23 |
| 1929 இலங்கை சிறுவர் தொலைபேசி சேவை | 24 |

| | |
|---|---|
| சிறுவர் துஷ்பிரயோகங்கள் பற்றி முறைப்பாடுகள் | 25 |
| சட்டரீதியான பணிகள் | 26-27 |
| சிறுவர் துஷ்பிரயோகத்தினால் பாதிக்கப்பட்டவர்களின் சாட்சிகளை வீடியோ ஒளிப்பதிவு செய்தல் | 27 |
| இணையத்தள கண்காணிப்பு அலகை அமுல்படுத்தல் | 27 |
| விசேட பொலிஸ் புலனாய்வு அலகு | 28 |
| உளவியல், சமூக நிகழ்ச்சித்திட்டம் | 28 |
| திரிதரு சுரக்கும் பியச வள நிலையம் | 29-30 |
| சிறுவர்களை மையமாகக் கொண்ட நிலையங்கள் | 30 |
| 2015.12.31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கான வருமான செலவினக் கூற்று | 31 |
| 2015.12.31 ஆம் திகதிக்கான நிதி நிலைமைக் கூற்று | 32 |
| 2015.12.31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கான காசோட்டக் கூற்று | 33 |
| கணக்காய்வு அறிக்கைகள் | 34-48 |

## அறிமுகம்

பண்டைய இலங்கைச் சமூகத்தில் சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் செயற்பட்டுள்ளமை அந்தக்கலாசாரம் பற்றி ஆராய்வதன் மூலம் நல்லமுறையில் தெரியவருகின்றது. அக்காலத்தில் சிறுவர் பாதுகாப்பு தொடர்பாக சமூகப் பாதுகாப்பு முறையியல் காணப்பட்டது. சமூகமானது பல்வேறு மாற்றங்களுக்கு ஆளானதன் பாதகமான விளைவாக சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்களில் துரித வளர்ச்சி இடம்பெற்றுள்ளது. இது சமூகப் பிரச்சினையாக வெளிப்படுத்தப்பட்டுள்ளமை இன்று இடம்பெற்றுள்ளது. சமூகப் பிரச்சினையொன்றின் பண்பாக இருப்பது அதனைச் சமூகத்தினூடாகவே தீர்த்துக் கொள்ளும் ஆற்றல் காணப்படுவதாகும்.

சிறுவர் பாதுகாப்பு என்பதை உறுதி செய்துகொள்ளும் அபாயகரமான நிலைமையை எதிர்கொள்வதற்கு சர்வதேச ரீதியிலான இணக்கப்பாடு அவசியம் என்பது புரிந்துகொள்ளப்பட்டது. அதற்கமைய 1989 நவம்பர் மாதம் 20 ஆம் திகதி ஐக்கிய நாடுகளின் சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயம் உலகப் பிரகடனமாக நிறைவேற்றிக் கொள்ளப்பட்டது. இந்த சமவாயம் 54 பிரிவுகளைக் கொண்டுள்ளதுடன், அதன் மூலம் உலகின் ஒவ்வொரு பிள்ளைக்கும் உரித்தாக வேண்டிய உரிமைகள் மற்றும் மேற்படி உரிமைகளை அமுல்படுத்துவதில் அரசுக்கு உரித்தான பொறுப்பும் விபரிக்கப்பட்டுள்ளது. சிறுவர் உரிமைகள் தொடர்பாகக் காணப்படுகின்ற சமூக நிலைமையை ஆராயும் போது, சிறுவர் வியாபாரம், சிறுவர் விபச்சாரத்தொழில், சிறுவர்களை ஆபாசத் திரைப்படங்கள் மற்றும் வெளியீடுகளுக்குப் பயன்படுத்துவதை நோக்கக்கொண்டு, சர்வதேச இரகசிய வியாபாரம் அதிகரிப்பது பற்றித் தீவிர கவனம் செலுத்தி, ஆயுதப்போராட்டங்களில் சிறுவர்கள் பலாத்காரமாக யுத்த சேவையில் ஈடுபடுத்தப்படல் அல்லது ஆட்சேர்ப்புச் செய்வதை சர்வதேச குற்றமொன்றாக குறிப்பிட்டு 2000 ஆம் ஆண்டு சிறுவர் உரிமைகள் சமவாயத்திற்கு, சிறுவர்களை ஆயுதப் போராட்டங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதைத் தடுத்தல் மற்றும் சிறுவர் வியாபாரம், சிறுவர் விபச்சாரம் மற்றும் சிறுவர்களை ஆபாசத் திரைப்படங்கள் மற்றும் வெளியீடுகளுக்குப் பயன்படுத்துவதை தடுத்தல் ஆகிய உபவரைவுகள் உள்ளடக்கப்பட்டன.

உலகில் காணப்பட்ட இந்தப்போக்குடன் இலங்கை அரசும் ஐக்கிய நாடுகளின் சிறுவர் சமவாயத்தில் 1991 ஆம் ஆண்டு கையொப்பமிட்டு தமது இணக்கப்பாட்டை தெரிவித்தது. அதற்கமைய, இலங்கையில் சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை சிபாரிசு செய்வது தொடர்பாக 1996 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் சிறுவர் பாதுகாப்பு பற்றிய சனாதிபதி செயலணி தாபிக்கப்பட்டது. இதன்போது விடயங்களை ஆராய்ந்த மேற்படி குழு சிறுவர் துஷ்பிரயோகங்களை குறைப்பதற்குத் தத்துவமளிக்கப்பட்ட அரச நிறுவனமொன்றின் தேவை தொடர்பிலான சிபாரிசுகள் சமர்ப்பிக்கப்பட்டன. அதற்கமைய 1998 இன் 50 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டத்தின் மூலம் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தாபிக்கப்பட்டது. தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் ஆரம்பம் முதல் இன்று வரை சிறுவர் துஷ்பிரயோகங்களைத் தடுத்தல், சிறுவர் துஷ்பிரயோகங்களின் போது அது தொடர்பில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் பாதிக்கப்பட்ட சிறுவர்களை மீள சமூகமயப்படுத்தல் தொடர்பான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது.

1998 இன் 50 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டத்தின் அதிகாரங்களைப் பயன்படுத்தி நாட்டின் சிறுவர்களின் பாதுகாப்பு தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், 2004 டிசம்பர் மாதம் 26 ஆம் திகதி ஏற்பட்ட சுனாமி அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்ட சிறுவர்களின் அபிவிருத்திக்காக 2005 இன் 16 ஆம் இலக்க சுனாமி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் மூலமும் அதிகாரசபைக்கு தத்துவங்கள் அளிக்கப்பட்டுள்ளன. மேலும் 2005 இன் 34 ஆம் இலக்க குடும்ப வன்முறைகளைத் தடுக்கும் சட்டத்தின் மூலமும் ஒரு பிள்ளை குடும்ப வன்முறைக்கு ஆளாகும் பட்சத்தில் அதிகாரசபைக்கு அறியக் கிடைக்கும்போது மூன்றாம் தரப்பினராக அதில் தலையிட முடியும்.

சிறுவர்களின் உச்சளவான நலனுக்காக செயற்படுவதற்கு சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்களை துரிதமாக மற்றும் முறையாக அறிக்கையிடுவது தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்வதற்கு 2010 யூலை 22 ஆம் திகதி "1929" இலங்கை சிறுவர் தொலைபேசி சேவையானது 24 மணிநேரமும் அமுல்படுத்துவதற்கு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் வளவில் தாபிக்கப்பட்டுள்ளது. இந்தத் தொலைபேசிச் சேவை ஆரம்பிக்கப்பட்டதை அடுத்து சமூகத்தில் மறைந்திருந்த சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் அறிக்கையிடப்படுவதை அவதானிக்க முடிந்தது. இன்று இலங்கையின் சகல மாவட்டங்களையும் உள்ளடக்கும் வகையில் சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் அறிக்கையிடப்படுவதுடன், ஆலோசனைச் சேவைகளையும் இதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும். இன்று இந்த தொலைபேசிச்சேவை மக்களுக்கு மிகநெருக்கமானதொன்றாக இயங்கிவருகின்றது.

**தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் செயற்பணி**

- சிறுவர் துஷ்பிரயோகத்தை தடுப்பதும் அவ்வாறான துஷ்பிரயோகத்துக்கு ஆளாகின்ற சிறுவர்களை பாதுகாப்பதும் அவர்களுக்கு சிகிச்சையளிப்பது தொடர்பான தேசிய கொள்கையொன்றை தயார்செய்வதற்கு அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குவதும்.

- சிறுவர் துஷ்பிரயோகத்தை தடுப்பதற்காக மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் தொடர்பில் அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குதல்.

- அவ்வாறான துஷ்பிரயோகங்களுக்கு ஆளானவர்களை பாதுகாப்பதற்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குதல்.

- துஷ்பிரயோகத்தில் இருந்து பாதுகாத்துக்கொள்வதற்காக சிறுவர்களுக்கு உள்ள உரிமைகள் தொடர்பாகவும், சிறுவர் நெறிபிறழ்வைத் தடுப்பதற்கான முறைமை பற்றியும் அறிவுறுத்தல்.

- சிறுவர் துஷ்பிரயோகத்தை தடுக்கின்ற பணிக்கும் அவ்வாறான துஷ்பிரயோகங்களுக்கு ஆளாவதில் இருந்து பாதுகாத்துக்கொள்வதற்கும் அவர்களின் உரிமைகளை பாதுகாத்துக்கொள்வதற்கும், தேவையான சகல வகையிலுமான நடவடிக்கைகளை மேற்கொள்வதும், பொருத்தமான சந்தர்ப்பங்களில் அந்தப்பணிகளுக்கு உரிய அமைச்சுக்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்றங்கள், மாவட்ட, பிரதேச செயலாளர்களினதும் அரசாங்க, தனியார் துறையினரினதும், அமைப்புகளின் அறிவுரைகளை ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளல்.

- சிறுவர் துஷ்பிரயோகத்தை தடுப்பதற்கான தேசிய கொள்கையை பயன்மிக்கவாறு அமுல்படுத்துவதற்கு தேவையான சட்ட ரீதியான நிர்வாக அல்லது வேறு திருத்தங்களை சிபாரிசு செய்தல்.

- சகல வகையிலும் சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பான சட்டங்களை அமுல்படுத்துவதை ஒழுங்குபடுத்தல்.

- சிறுவர் துஷ்பிரயோகங்களுடன் சம்பந்தப்பட்ட அனைத்து புலனாய்வுகள் மற்றும் குற்றவியல் சட்ட நடவடிக்கைகளின் முன்னேற்றங்களை ஒழுங்குபடுத்தல்.

- ஆயுத மோதல்களின் அழுத்தங்களினால் பாதிக்கப்பட்டுள்ள சிறுவர்கள் தொடர்பாக மனிதாபிமான அடிப்படையில் கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்துவதற்கான நடவடிக்கைகளை சிபாரிசு செய்வதும், அவர்களின்

உடல் மற்றும் உளவியல் நலன்புரிக்கு நடவடிக்கை எடுப்பதும் உட்பட அவ்வாறான சிறுவர்களின் பாதுகாப்பு மற்றும் அவர்களை சமூகத்தில் மீள இணைத்துக்கொள்வதும்.

- குற்றங்கள் தொடர்பான புலனாய்வுகள் மற்றும் குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளுடன் சம்பந்தப்பட்டுள்ள சிறுவர்களின் பாதுகாப்பிற்கும் அரவணைப் பிற்கும் தேவையான சந்தர்ப்பங்களில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

- சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பான மக்களின் முறைப்பாடுகளை பொறுப்பேற்பதும் தேவையான சந்தர்ப்பங்களில் அந்த முறைப்பாடுகளை உரிய அதிகாரிகளிடம் சமர்ப்பிப்பதும்.

- சிறுவர் துஷ்பிரயோகங்களுக்கு எதிராக மேற்கொள்கின்ற கடுமையான நடவடிக்கைகளை ஒருங்கிணைப்புச் செய்வது தொடர்பாக மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்றங்கள், அரச சார்பற்ற அமைப்புகளுக்கு ஆலோசனை வழங்குவதும் உதவி வழங்குவதும்.

- சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பான தேசிய தரவுக்கட்டமைப்பை தயார் செய்வதும் அதனை பேணிவருவதும்.

- சம்பந்தப்பட்ட அமைச்சுகள், வேறு நிறுவனங்களின் அலோசனைகளைப் பெற்று சிறுவர்களுக்கு சிறுவர் பாதுகாப்புச் சேவைகளை ஆற்றுகின்ற சகல சமய மற்றும் மத சார்பான நிறுவனங்களை கண்காணிப்புச் செய்வதும் அது தொடர்பான ஒழுங்குபடுத்தல்களும்

- சிறுவர் துஷ்பிரயோகங்கள் மற்றும் சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் ஆராய்ச்சிகளை நடாத்துவதும் மேம்படுத்துவதும் ஒருங்கிணைப்புச் செய்வதும்.

- சிறுவர்களின் பாதுகாப்பு மற்றும் சிறுவர்களின் உரிமைகளை பாதுகாப்பது தொடர்பாக மக்களுக்கு தகவல்களை பெற்றுக்கொடுப்பதும் கல்வியை பெற்றுக்கொடுப்பதும்.

- சிறுவர் துஷ்பிரயோகங்கள் இடம்பெறுவதற்குள்ள வாய்ப்புக்களை குறைப்பதற்காக சுற்றுலாத்துறை நடவடிக்கைகளுடன் சம்பந்தப்பட்டுள்ள அனைத்து பிரிவுகளுடனும் கலந்துரையாடல்களை மேற்கொள்ளல்.

- சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான செயலமர்வுகள், கருத்தரங்குகள், கலந்துரையாடல்களை ஒழுங்குசெய்வதும் அதற்கான வசதிகளை செய்துகொடுப்பதும்.


- சகல வகையிலுமான சிறுவர் துஷ்பிரயோகங்களை வெளிப்படுத்துவதும், தடுப்பதும் அது தொடர்பாக வெளிநாட்டு அரசாங்கங்கள் மற்றும் சர்வதேச அமைப்புகளுடன் ஒருங்கிணைப்புகளைப் பேணி நடவடிக்கை மேற்கொள்வதும் தகவல்களை பரிமாற்றிக்கொள்வதும்.

**அதிகாரசபையின் ஒழுங்கமைப்பு**

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் தலைமையகத்தில் பின்வரும் அலகுகள் இயங்கிவருகின்றன.

- நிருவாக அலகு
- நிதி அலகு
- திட்டமிடல் மற்றும் தகவல் அலகு
    - நூலகம்
- நிகழ்ச்சித்திட்டங்கள் அலகு
- உளவியல் சமூக அலகு
- சட்ட அலகு
- சட்டத்தை அமுல்படுத்தும் அலகு
    - 1929 இலங்கை சிறுவர் தொலைபேசிச் சேவை
    - விசாரணை அலகு
    - மத்திய ஆவணக்காப்பகம்
- உள்ளகக் கணக்காய்வு அலகு
- விசேட பொலிஸ் விசாரணை அலகு

# 2015ஆண்டு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் நிறுவன ஒழுங்கமைப்பு



## அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்

### இணையத்தளம் மற்றும் தொலைபேசி ஊடாக சிறுவர்களுக்கு முறைகேடானவாறு அழுத்தம் கொடுக்கும் நபர்களுக்கு எதிராக செயற்படுவதற்கான செயலணியொன்றைத் தாபித்தல்.

பேஸ்புக் போன்ற சமூக வலைத்தளங்கள் உட்பட இணையத்தளம் மூலம் மற்றும் தொலைபேசி மூலம் சிறுவர்களுக்கு பாலியல் அழுத்தம் கொடுத்தல் உள்ளிட்ட தொல்லைகளை மேற்கொள்ளும் நபர்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளத் தேவையான சட்டங்களை வகுப்பதற்கு செயலணியொன்றை நியமனம் செய்ய தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இந்த செயலணியில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை, சட்டமா அதிபர் திணைக்களம், நீதி அமைச்சு, இலங்கை கணனி திடீர் பதில் நடவடிக்கை மேற்கொள்ளும் மன்றம் மற்றும் அரசசார்பற்ற அமைப்புக்களின் அங்கத்தவர்கள் உள்ளடங்குகின்றனர்.

இந்த செயலணிக்கு உரித்தான நிபுணத்துவ அறிவைக் கொண்ட அங்கத்தவர்கள் பின்வருமாறு.

01. கலாநிதி திருமதி நடாஷா பாலேந்திரா – தவிசாளர், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை
02. சட்டத்தரணி திரு சஜீவ சமரநாயக்க – பிரதித் தவிசாளர், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை
03. திரு சுஹத கம்லத் - மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் - சட்டமா அதிபர் திணைக்களம்
04. திரு நந்தன முனசிங்க – சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் - பொலிஸ் திணைக்களம்

சிறுவர்களுக்கு மற்றும் இளைஞர்களுக்கு கொடுமைப்படுத்தல், தொல்லைகொடுக்க அவர்களின் பின்னால் துரத்திச்சென்று துன்புறுத்தல் அல்லது அச்சுறுத்தி பலாத்காரமாக பணம் பெறுவதற்கு இணையத்தளம் அல்லது நடமாடும் தொலைபேசி போன்ற உபகரணங்களைப் பயன்படுத்துகின்ற நபர்களுக்கு எதிராக விசாரணைகளை மேற்கொள்வதற்கு சட்டத்தினால் கிடைக்கக்கூடிய உச்சளவான தத்துவத்தைப் பயன்படுத்தி வழக்குத் தாக்கல் செய்வதற்கும் இந்த செயலணி தாமதிக்காது நடவடிக்கைகளை ஆரம்பிக்கும். மேலும் இணையத்தளத்தை மையமாகக் கொண்டு இடம்பெறுகின்ற சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் ஏற்புடையதான சட்டங்களை வகுப்பதற்கும் சிறுவர்களான பாதிக்கப்பட்டவர்களுக்காக இந்த செயலணி நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இந்த ஆண்டில் இணையத்தளத்தை முறைகேடாகப் பயன்படுத்துவது தொடர்பில் மற்றும் விசாரணை நடவடிக்கைகள் தொடர்பிலான தரவுகளை கணினிச் சேவைகளை ஆற்றுகின்ற நிறுவனங்களிடமிருந்து பெற்றுக்கொண்டு முறைப்பாடுகளை விசாரணை செய்வதை முறைப்படுத்த இலங்கையில் சட்ட ரீதியான நிலைமை இல்லாமையினால் சட்டக் கட்டமைப்பை தயார் செய்வதற்கு தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவுடன் கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டன. மேலும் இணையத்தளத்தை பயன்படுத்துகின்ற

அச்சுறுத்தலான நிலைமைகளைக் கொண்ட பாடசாலைகள் மற்றும் சமூகக் கட்டமைப்புக்களை அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன. மேற்படி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு கணினி திடீர் பதில் நடவடிக்கை மேற்கொள்ளும் மன்றம் தேவையான உதவிகளை வழங்கியுள்ளது. பெப்ரவரி மாதம் 07 ஆம் திகதி கொண்டாடப்படுகின்ற சர்வதேச பாதுகாப்பு இணையத்தள தினத்தை முன்னிட்டு பிரதான வளவாளர் ஒருவராக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை நடவடிக்கை மேற்கொள்கின்றது.

**சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு புனர்வாழ்வளிக்கும் நடவடிக்கைகள் மற்றும் நலன்புரி நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.**

2004 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 26 ஆம் திகதி இடம்பெற்ற சுனாமி அனர்த்தத்தின் விளைவாக பெற்றோரை இழந்துள்ள 18 வயதிற்கு குறைவான ஒவ்வொரு சிறுவனுக்கும், 21 வயதுக்கு குறைவான இளைஞர்களுக்கும் பெற்றோர் இருவரில் ஒருவரையேனும் இழந்துள்ள மற்றும் உயிர்வாழும் தாய் அல்லது தந்தைக்கு பாதுகாப்பதற்கு அல்லது அரவணைப்பதற்கு ஆற்றல் இல்லாத ஒவ்வொரு பிள்ளைக்கும், இளைஞருக்கும் 2005ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க சுனாமி விசேட சட்டத்தின் மூலம் அரவணைப்பைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் இந்த சட்டத்தின் மூலம் மேற்படி நடவடிக்கைகளை மேற்கொள்ள தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான கெப்பகரு பெற்றோர் பாதுகாவலர் அரவணைப்பு நடவடிக்கைகள், பின்னாய்வு நடவடிக்கைகள் மற்றும் நலன்புரி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. 2015 ஆம் ஆண்டில் 8 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளதுடன், இதன் மூலம் சிறுவர்கள் 100 பேர் பயனடைந்துள்ளனர்.

**இல்லமயப்படுத்தப்பட்டுள்ள சிறுவர்களை திடீர் விபத்துக்களிலிருந்து தடுத்துக் கொள்வதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்றை நடாத்தல்**

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் 2015 ஆம் ஆண்டில் சுகாதாரம் மற்றும் சுதேச மருத்துவ அமைச்சுடன் இணைந்து சிறுவர்களை திடீர் விபத்துக்களிலிருந்து தடுத்துக் கொள்வது தொடர்பாக நாடளாவிய ரீதியில் இல்லமயப்படுத்தப்பட்டுள்ள சிறுவர்களுக்கான விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டத் தொடரொன்று அமுல்படுத்தப்பட்டுள்ளது. இதன் கீழ் 2015 ஆம் ஆண்டில் 89 விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன. 3644 பேர் இதன் மூலம் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

**பாடசாலை சிறுவர் பாதுகாப்புக்குழுக்கள்**

பாடசாலை சிறுவர் பாதுகாப்பு தொடர்பாக மாற்றமொன்றைச் செய்யக்கூடிய இடமாக இமனங்காணப்பட்ட தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை, கல்வி அமைச்சுடன் இணைந்து நாடு முழுவதிலும் பாடசாலைகளில் ‘‘சுரகும் பவ்வ’’ எனும் பாடசாலை சிறுவர் பாதுகாப்பு

குழுக்களைத் தாபிக்கும் நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துகின்றது. 2011 இன் 17 ஆம் இலக்க கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கை இதற்கான வழிகாட்டல்களை வழங்குகின்றது. இந்தக் குழுவைத் தாபிக்கும் நோக்கங்களில், பாடசாலை வளவுக்குள் சிறுவர்களுக்கு சாதகமான சூழலை உருவாக்குதல், பாடசாலைக் கட்டமைப்பினுள் சிறுவர்கள் துஷ்பிரயோகத்திற்கு ஆளாகும் அச்சுறுத்தலான நிலைமையைக் குறைத்தல், அசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும், பெற்றோருக்கும் இடையே நல்லதொரு உறவைக் கட்டியெழுப்பல், சகல வகையிலுமான துஷ்பிரயோகங்களிலிருந்தும் பிள்ளைகளைப் பாதுகாத்துக்கொள்ளல் மற்றும் சிறுவர்களின் ஆளுமை விருத்தி ஆகியனவாகும்.

இங்கு விசேட அம்சமாக இருப்பது சிறுவர்களின் மனநிலையை இனங்காண்பதற்கு மற்றும் அவர்களுக்கு உதவும் பொருட்டு அவர்களின் சிக்கல்கள் மற்றும் கருத்துக்களைக் குறிப்பிட்டு இடுவதற்கான “சிரிப்பு, கண்ணீர் பெட்டி” எனும் பெட்டிகளை பாடசாலைகளில் தாபிப்பதாகும். இதற்கமைய 2015 ஆம் ஆண்டில் மாவட்ட மட்டத்தில் 1856 பாடசாலைகளில் இவ்வாறான பெட்டிகள் பொருத்தப்பட்டுள்ளன. 2015 ஆம் ஆண்டில் பாடசாலை சிறுவர் பாதுகாப்புக் குழுக்களைத் தாபித்தல் மற்றும் அமுல்படுத்துவதன் கீழ் பாடசாலை மாணவர்கள் 41,780 பேருக்கு விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளதுடன், மேற்படி நிகழ்ச்சித்திட்டங்களின் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் மாவட்ட மற்றும் பிரதேச அலுவலர்களினால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.



**சிவில் அமைப்புக்களின் அங்கத்தவர்களை அறிவுறுத்தல்**

ஒவ்வொரு பிள்ளையையும் சகல விதமான துஷ்பிரயோகங்களிலிருந்தும் பாதுகாப்பது பற்றிய அறிவையும், ஆற்றல்களையும் அபிவிருத்தி செய்தல் மற்றும் அதற்காக சிவில் சமூக அங்கத்தவர்களை வலுவூட்டும் நோக்கத்துடன், கிராமிய மட்டத்தில் சிவில் அமைப்புக்களை வலையமைப்புச் செய்தல் மற்றும் சிவில் அமைப்புக்களின் அங்கத்தவர்களை பலப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள் 2015 ஆம் ஆண்டில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் நடாத்தப்பட்டன. இதற்கமைய ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவையும் உள்ளடக்கும் வகையில் 2015 ஆம் ஆண்டில் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் 460 நடாத்தப்பட்டதுடன், பயனாளிகளின் எண்ணிக்கை 45,420 பேராகும்.

**சுகாதார தொழில்சார் வல்லுநர்களை அறிவுறுத்தல்**

சுகாதார தொழில்சார் வல்லுநர்களின் திறமைகளை வளர்ப்பதற்காக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்படுகின்றன. இதன் முக்கிய நோக்கமாக இருப்பது, சுகாதாரத் தொழில்சார் வல்லுநர்களை சிறுவர் பாதுகாப்பு தொடர்பான பல்வேறு துறைகளிலும் அறிவும், ஆற்றலும்மிக்கவர்களாக மாற்றியமைப்பதன் மூலம் சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் மென்மேலும் உணர்வுபூர்வமான நபர்களை உருவாக்கல், அரச அலுவலர் என்ற வகையில் சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்களின்போது அல்லது அவ்வாறான அச்சுறுத்தலான நிலைமையின் போது செயற்பட வேண்டிய முறைகள் பற்றிய உரிய அறிவு, திறமை மற்றும் மனப்பாங்கினை அபிவிருத்தி செய்வதன் மூலம் மென்மேலும் பயன்மிக்கவாறு மேற்படி சிக்கல்களைத் தீர்த்துக் கொள்வதற்குத் தேவையான ஒருங்கிணைப்பை மேற்கொள்ளத்தேவையான வழிகாட்டலை மேற்கொள்ளல் மற்றும் சுகாதார தொழில்சார் வல்லுநர்கள் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையுடன் கொண்டுள்ள உறவை வலுவூட்டுவதன் மூலம் சிறுவர் துஷ்பிரயோகங்களைக் குறைத்தல் ஆகியனவாகும். இதற்கமைய, 2015 ஆம் ஆண்டில் பின்வருமாறு சுகாதார தொழில்சார் வல்லுநர்களை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

**தாதி அலுவலர்களை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டம்**

| திகதி | இடம் | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 2015.04.07 | லங்கா ஹொஸ்பிரலின் தாதிக் கல்லூரியின் பிரதான மண்டபம் - நாராஹேன்பிட்டி | 70 |
| 2015.07.30 | தாதிக் கல்லூரியின் கேட்போர்கூடம் - முல்லேரியா | 61 |
| **மொத்தம்** | | **131** |

**பட்டப் பின்படிப்பு மருத்துவப் பட்டத்தைக் கற்கின்ற மருத்துவர்களை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டம்**

| திகதி | இடம் | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 2015.08.25 | தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் கேட்போர்கூடம் | 53 |
| **மொத்தம்** | | **53** |

**குடும்ப சுகாதார சேவைகள் அலுவலர்கள் மற்றும் பொது சுகாதார பரிசோதகர்களை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டம்**

| திகதி | இடம் | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 2015.01.19 | மாத்தறை மாவட்ட செயலக கேட்போர்கூடம் - மாத்தறை | 51 |
| 2015.02.19 | பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலக கேட்போர்கூடம் - மட்டக்களப்பு | 68 |
| 2015.03.02 | முகாமைத்துவ திறன் அபிவிருத்தி நிலையம் - யாழ்ப்பாணம் | 63 |
| 2015.09.10 | ஹம்பாந்தோட்டை மாவட்ட செயலக கேட்போர்கூடம் - ஹம்பாந்தோட்டை | 75 |
| 2015.10.20 | மாத்தளை மாவட்ட செயலக கேட்போர்கூடம் - மாத்தளை | 51 |
| 2015.11.05 | அநுராதபுரம் மாவட்ட செயலக கேட்போர்கூடம் - அநுராதபுரம் | 79 |
| **மொத்தம்** | | **387** |

**பற்சிகிச்சை தொடர்பிலான மருத்துவர்களை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டம்**

| திகதி | இடம் | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 2015.08.11 | பற் சுகாதார நிறுவகம் - மஹரகம | 49 |
| **மொத்தம்** | | **49** |





**தேசிய கல்விக் கல்லூரிகளின் ஆசிரிய மாணவர்களை அறிவுறுத்தல்**

சிறுவர் பாதுகாப்பு தொடர்பாக தேசிய கல்விக் கல்லூரிகளில் கல்வி பயிலும் ஆசிரிய மாணவர்களை அறிவுறுத்துகின்ற நிகழ்ச்சித்திட்டத்தின் முக்கிய நோக்கம், ஆசிரிய தொழிலில் பிரவேசிப்பதற்கு உத்தேசித்துள்ள தேசிய கல்விக் கல்லூரிகளில் கல்வி பயில்கின்ற ஆசிரிய மாணவர்களுக்கு சிறுவர் பாதுகாப்பு பற்றிய அறிவையும் மற்றும் ஆற்றல்களையும் பெற்றுக்கொடுப்பதன் ஊடாக சிறுவர்கள் தொடர்பில் உணர்வுபூர்வமான மற்றும் அறிவுமிக்க ஆசிரியர் சமுதாயம் ஒன்றை உருவாக்குவதாகும். 2015 ஆம் ஆண்டு பின்வரும் தேசிய கல்விக் கல்லூரிகளின் ஆசிரிய மாணவர்களுக்கான அறிவுறுத்தல் நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன.

| திகதி | இடம் | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 2015.07.22 | பஸ்துன்ரட்ட தேசிய கல்விக் கல்லூரி கேட்போர்கூடம் - களுத்துறை | 234 |
| 2015.07.24 | ருவன்புர தேசிய கல்விக் கல்லூரி கேட்போர்கூடம் - இரத்தினபுரி | 166 |
| 2015.07.28 | மகாவலி தேசிய கல்விக் கல்லூரி கேட்போர்கூடம் - பொல்கொல்ல | 262 |
| 2015.09.18 | சியனே தேசிய கல்விக் கல்லூரி கேட்போர்கூடம் - வேனன்கொட | 210 |
| 2015.09.28 | ஊவா தேசிய கல்விக் கல்லூரி கேட்போர்கூடம் - பிந்துனுவெவ | 148 |
| 2015.10.01 | பேராதனை தேசிய கல்விக் கல்லூரி கேட்போர்கூடம் - பெனிதெனிய | 242 |
| 2015.10.18 | நில்வலா தேசிய கல்விக் கல்லூரி கேட்போர்கூடம் - அகுரஸ்ஸ | 207 |
| 2015.10.27 | புலதிசி தேசிய கல்விக் கல்லூரி கேட்போர்கூடம் - பொலன்னறுவை | 201 |
| 2015.11.25 | வவுனியா தேசிய கல்விக் கல்லூரி கேட்போர்கூடம் - வவுனியா | 225 |
| **மொத்தம்** | | **1895** |



**பிரான்ஸ் பொலிசாரினால் மேற்கொள்ளப்பட்ட விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டம்**

1998 இன் 50 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டத்திற்கு அமைய 14 ஆம் பிரிவின் (ன) இற்கு அமைய சகல வகையிலுமான சிறுவர் துஷ்பிரயோகங்களையும் வெளிப்படுத்திக்கொள்ளல் மற்றும் தடுத்துக்கொள்வது தொடர்பாக வெளிநாட்டு அரசுகள் மற்றும் சர்வதேச அமைப்புக்களுடன் ஒருங்கிணைப்புடனான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும தகவல் பரிமாற்றம் செய்துகொள்வதற்கு அமைய பிரான்ஸ் பொலிசினால் 2015.11.16 ஆம் திகதி முதல் 2015.11.20 ஆம் திகதி வரை விசேடமாக இணையத்தளப் பாதுகாப்பு மற்றும் குற்றச்செயல்கள் பற்றிய விசாரணை தொடர்பிலான செயலமர்வொன்று நடாத்தப்பட்டது. இந்த செயலமர்வுக்கு பிரான்ஸ் பொலிசாரினால் இலவசமாக வளவாளர் பங்களிப்பு வழங்கப்பட்டது. இந்த செயலமர்வுக்கு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் விசேட பொலிஸ் புலனாய்வுப் பிரிவின் அலுவலர்கள், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் சட்டத்தை அமுல்படுத்தும் அலுவலர்கள், பொலிஸ் குற்றவியல் பிரிவின் அலுவலர்கள், கணினி திடீர் நடவடிக்கை மன்றத்தின் அலுவலர்கள் மற்றும் பொலிஸ் சிறுவர் மற்றும் மகளிர் பணியகத்தின் அலுவலர்கள் உட்பட 25 பேர் பங்கேற்றனர்.






**சிறுவர் துன்புறுத்தலுக்கு எதிரான தேசிய தினம்**

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 1581/21ஆம் இலக்க 2008 டிசம்பர் 26 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட அறிவித்தல் மூலம் அப்போதைய சிறுவர் அபிவிருத்தி, மகளிர் அலுவல்கள் அமைச்சர் கௌரவ சுமேதா ஜயசேன அவர்களினால் ஒவ்வொரு வருடமும் சனவரி மாதம் 04 ஆம் திகதி சிறுவர் துன்புறுத்தலுக்கு எதிரான தேசிய தினமாக பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. 2015 ஆம் ஆண்டு டெயிலி நியுஸ், தினகரன், திவயின, லங்காதீப மற்றும் ரிவிர ஆகிய பத்திரிகைகளில் சிறுவர் துன்புறுத்தல்கள் சம்பந்தமாக அறிவுறுத்தும் அறிவித்தல்கள் வெளியிடப்பட்டன.




**சிறுவர் ஊழியத்துக்கு எதிரான சர்வதேச தினக் கொண்டாட்டம்**

2015 யூன் மாதம் 12 ஆம் திகதி கொண்டாடப்பட்ட சிறுவர் ஊழியத்துக்கு எதிரான சர்வதேச தினத்தை முன்னிட்டு நடாத்தப்பட்ட தேசிய வைபவம் அப்போதைய சிறுவர் அலுவலர்கள் இராஜாங்க அமைச்சர் கௌரவ ரோசி சேனாநாயக்க தலைமையில் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இம்முறை இதன் தொணிப்பொருள் "சிறுவர் ஊழியத்தை ஒழிப்போம் - தரமான கல்வியறிவைப் பெற்றுக் கொடுப்போம்" என்பதாகும். பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் உட்பட 1500 இற்கும் மேற்பட்ட எண்ணிக்கையானோர் கலந்துகொண்ட இந்த நிகழ்வின் போது சிறுவர் ஊழியம் உள்ளடங்களாக சகல வகையிலுமான துஷ்பிரயோகங்களிலிருந்தும் சிறுவர்களைப் பாதுகாத்துக் கொள்வது தொடர்பான விசேட விரிவுரைகளும் நிகழ்த்தப்பட்டன. கலாநிதி பிரநீத் அபேசுந்தர இங்கு விசேட உரையாற்றினார். மேலும் துஷ்பிரயோகம் மேற்கொள்வோரிடமிருந்து பாதுகாத்துக்கொள்வது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள ஆக்கமும் இதன்போது சிறுவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது.










**சிறுவர் ஊழியத்துக்கு எதிரான சர்வதேச தினத்தை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் நடாத்தப்பட்ட கட்டுரைப் போட்டிகள்**

சிறுவர் ஊழியத்துக்கு எதிரான சர்வதேச தினத்தை முன்னிட்டு அகில இலங்கை ரீதியில் கட்டுரை ஆக்கப் போட்டியொன்று ஒழுங்கு செய்யப்பட்டது. கனிஷ்ட பிரிவு (தரம் 9 முதல்

தரம் 11 வரை) மற்றும் சிரேஷ்டப் பிரிவின் கீழ் (தரம் 12 மற்றும் 13)“சிறுவர் ஊழியத்தை ஒழிப்போம் - தரமான கல்வியைப் பெற்றுக்கொடுப்போம்” எனும் தலைப்பின் கீழ் இப்போட்டி நடாத்தப்பட்டதுடன்,சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் ஆக்கங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டதுடன், மாவட்ட மற்றும் அகில இலங்கை அடிப்படையில் வெற்றியீட்டியவர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள். வெற்றியாளர்களுக்கு பதக்கங்கள், பரிசுகள் மற்றும் சான்றிதழ்களை வழங்கி வைக்கும் நிகழ்வு அப்போதைய சிறுவர் அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் கௌரவ ரோசி சேனாநாயக்க அவர்களின் தலைமையில் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.



**உலக சிறுவர் தினத்தைக் கொண்டாடும் தேசிய நிகழ்ச்சித்திட்டம்**


2015 உலக சிறுவர் தினம் “சிறுவர்களுக்கு நட்புறவான சூழல் - உலகை மிளிரச் செய்யும் மனங்கவர் நாடு” என்ற தொணிப்பொருளின் கீழ் நடாத்தப்பட்டது. இதன் தேசிய வைபவம் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடாத்தப்பட்டது. இதனை முன்னிட்டு சிறுவர்களுக்கான உளவியல், சமூக செயற்பாடுகளைக் கொண்ட விசேட நிகழ்ச்சித்திட்டமொன்று யாழ்ப்பாணம் சிறுவர் பூங்காவில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் நடாத்தப்பட்டது. இதில் யாழ்ப்பாணம் மாவட்டத்தைச் சேர்ந்த சிறுவர் சிறுமியர்கள் 500 இற்கும் மேற்பட்டோர் கலந்து சிறப்பித்தார்கள். சிறுவர் துஷ்பிரயோகங்களிலிருந்து பாதுகாத்துக்கொள்வது தொடர்பாக

இதில் கலந்துகொண்ட சிறுவர்களை அறிவுறுத்துவதற்கும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை நடவடிக்கை மேற்கொண்டிருந்தது.




**உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு பாடசாலை சிறுவர்களுக்கான போஸ்டர் ஆக்கப்போட்டியை நடாத்தல்**

2015 உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை பாடசாலை பிள்ளைகளுக்கான போஸ்டர் ஆக்கப்போட்டியொன்றை நடாத்தியது, இதன்போது 14-18 வயது வரையான பாடசாலை மாணவர்களின் ஆக்கங்கள் இப்போட்டிக்கு சமர்ப்பிக்கப்பட்டன. இதன் தலைப்பு இணையத்தளம் மற்றும் நடமாடும் தொலைபேசியை கவனமாகக் பயன்படுத்துவோம் என்பதாகும். இது பாடசாலை மாணவர்களுக்காக 2 பிரிவுகளின் கீழ் அதாவது 14-16 மற்றும் 17-18 வயதுக்கு இடைப்பட்டவர்களுக்கென நடாத்தப்பட்டது.







**உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு "இடையீட்டுக் கல்வி மற்றும் சிறுவர் பாதுகாப்பு பற்றிய கொள்கை"சார் கலந்துரையாடலை நடாத்தல்**

2015 உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை கல்வி அமைச்சுடன் இணைந்து பாடசாலை "இடையீட்டுக் கல்வி மற்றும் சிறுவர் பாதுகாப்பு பற்றிய கொள்கை"சார் கலந்துரையாடலை ஒழுங்குசெய்துள்ளது. 2015 அக்டோபர் மாதம் 08 ஆம் திகதி பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இது நடைபெற்றது. இதில் 51 பேர் கலந்துகொண்டனர்.









**சர்வதேச சிறுமியர் தினம்**

சர்வதேச சிறுமியர் தினம் "மகளே இளமையின் பலம் நீயே" எனும் தொணிப்பொருளின் கீழ் கொண்டாடப்பட்டது. இதன் தேசிய நிகழ்ச்சித்திட்டம் 2015 அக்டோபர் மாதம் 11 ஆம் திகதி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்தின் கீழ் நடாத்திச் செல்லப்படுகின்ற சிறுவர் பராமரிப்பு நிலையங்களிலுள்ள வயது 12-18 இடைப்பட்ட 100 சிறுவர்களின் பங்கேற்புடன் செயலமர்வொன்று இலங்கை மன்றக் கல்லூரியில் நடாத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தின்போது சிறுவர் பாதுகாப்பு தொடர்பான கல்வி, தலைமைத்துவம், குழு உணர்வு மற்றும் அழகியற்கல்வி போன்ற துறைகளில் கவனம் செலுத்தப்பட்டது.



### தகவல்களை பெற்றுக்கொடுத்தல்

சிறுவர் பாதுகாப்பு, சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் சிறுவர் உரிமைகள் பற்றி பொதுமக்களுக்குத் தேவையான தகவல்களைப் பெற்றுக்கொடுப்பது தேசிய சிறுவர் அதிகாரசபையினால் மேற்கொள்ளப்படுகின்றது. இதன்போது தேவைக்கு ஏற்றவாறு பதாதைகள், துண்டுப்பிரசுரங்கள், ஸ்டிக்கர்கள், வெளியீடுகள் மற்றும் விவரண சித்திரங்கள் போன்றவற்றின் ஊடாக இந்த நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்படுகின்றது. 2015 ஆம் ஆண்டில் விநியோகிக்கப்பட்டுள்ள வெளியீடுகளின் எண்ணிக்கை 484,040 ஆகும்.



**கண்காட்சிகள் மற்றும் நடமாடும் சேவைகளை நடாத்துதல்**

பல்வேறு நிறுவனங்களினால் கல்விசார் கண்காட்சிகள் ஒழுங்கு செய்யப்படுவதுடன், கிடைக்கின்ற கோரிக்கைகளின் அடிப்படையில் மேற்படி கண்காட்சிகளில் சிறுவர் பாதுகாப்பு சம்பந்தமாக அறிவுறுத்தும் கல்விக் கண்காட்சிக் கூடங்களை தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை ஒழுங்கு செய்கின்றது. மேலும் பிரதேச மட்டத்தில் நடாத்தப்படுகின்ற நடமாடும் சேவைகளுக்கு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தமது பங்களிப்பை வழங்குவதன் மூலம் சிறுவர் பாதுகாப்பு பற்றிய அறிவை சமூகத்தில் மேம்படுத்துகின்றது. 2015 இல் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையானது 10 நடமாடும் சேவைகளை நடாத்தியுள்ளது.



**சிறுவர் பாதுகாப்பு சம்பந்தமான தகவல்களை வெகுசன ஊடகங்கள் ஊடாக மக்களுக்கு கொண்டு செல்லல்.**

நாட்டில் சிறுவர் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது சம்பந்தமான தகவல்களை வெகுசன ஊடக நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்புச் செய்து பொதுமக்களுக்கு அவற்றைக் கொண்டு செல்வதற்கு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை நடவடிக்கை மேற்கொள்கின்றது. இதன்போது இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களின் ஒத்துழைப்பும் பெற்றுக்கொள்ளப்படுகின்றது. சிறுவர் பாதுகாப்பு சம்பந்தமான செய்தி அறிவித்தல்களை ஊடகங்களுக்கு வெளியிடுதல், விடய ரீதியான ஊடகவியலாளர் மாநாடுகளை நடாத்துதல், தொலைக்காட்சி மற்றும் வானொலி அறிவித்தல்களை பிரச்சாரம் செய்தல், பத்திரிகை அறிவித்தல்களை வெளியிடுதல் போன்றன மேற்கொள்ளப்படுகின்றன. அவ்வாறே வானொலி மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு வளவாளராக பங்களிப்பும் செய்யப்படுகின்றது. 2015 ஆம் ஆண்டில் ஊடக அறிக்கைகள் 16 உம், பத்திரிகை அறிவித்தல்கள் 05 உம், தொலைக்காட்சி விளம்பரம் 01 உம் வெளியிடப்பட்டன.









**லபெந்தி புவத் ஹசுன (செய்திச் சஞ்சிகை)**




"ஒரு பத்திரிகையை விடவும் கூடுதலான விடயங்கள்"என்ற தொனிப்பொருளின் கீழ் தயார் செய்யப்பட்டுள்ள **லபெந்தி** எனும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் உத்தியோகபூர்வ செய்தி வெளியீடு மூன்று மாதங்களுக்கு ஒருமுறை வெளியிடப்படுகின்றது. இது பாரம்பரிய செய்தி வெளியீடுகளை விடவும் வித்தியாசமானதாக வெளியிடப்படுகின்றது. இதன் அடிப்படை நோக்கம் சிறுவர் பாதுகாப்பு பற்றி ஆசிரியர்களையும், பெற்றோரையும், சிறுவர்களையும் மற்றும் சமுதாயத்தினரையும் அறிவுறுத்துவதாகும். காலத்திற்குப் பொருத்தமான தலைப்புக்களை தெரிவு செய்து லபெந்தி செய்தி வெளியீடு தயார் செய்யப்படுகின்றது. 2015 ஆம் ஆண்டில் "சிறுவர்களின் பாதுகாப்புக்காக குடும்பங்களை வலுவூட்டல்" எனும் தொனிப்பொருளின் கீழ் லபெந்தி செய்தி வெளியீடு தயார் செய்யப்பட்டு வெளியிடப்பட்டது.

**1929 இலங்கை சிறுவர் தொலைபேசி சேவை**

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை சட்டத்தின் 14 (ஓ) பிரிவுக்கு அமைய சிறுவர் துஷ்பிரயோகங்கள் பற்றிய பொது மக்களின் முறைப்பாடுகளை ஏற்றுக் கொள்ளல் மற்றும் தேவையான சந்தர்ப்பங்களில் முறையப்பாடுகளை உரிய அதிகாரிகளிடம் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.



1929 இலங்கைச் சிறுவர் உதவித் தொலைபேசி சேவை 2010 ஜூலை 22ஆந் திகதி தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை கட்டிடத்தொகுதியில் தாபிக்கப்பட்டது. இது சிறுவர் துஷ்பிரயோகங்களின் முறைப்பாடுகளை பொறுப்பேற்றல் மற்றும் அவற்றுக்கு துரித நடவடிக்கை மேற்கொள்வதற்கான முன்னோடி பொறிமுறையாக உள்ளது. இலவசமாக 24 மணிநேரமும் இயங்கிவருகின்ற இந்த தொலைபேசி சேவையை சிறுவர்களின் பாதுகாப்பின் முக்கியமானதொரு திருப்புமுனையாக கருத முடியும். இதன்மூலம் சமூகத்தில் மறைந்து காணப்பட்ட சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்களை அறிக்கையிடுகின்ற போக்கு அதிகரித்துள்ளது.

கட்டணம் அறவிடாது இயங்கிவருகின்ற இலங்கை சிறுவர் உதவித் தொலைபேசி சேவைக்கு அழைப்பு விடுப்பதன் மூலம் எவரும் சிறுவர்கள் பற்றி எழுகின்ற சிக்கல்கள் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பான முறைப்பாடுகளை செய்வதற்கும், ஆலோசனை சேவைகளை பெற்றுக்கொள்வதற்கும் ஆற்றல் உள்ளது.

இந்த சேவை பிரதானமாக சிறுவர்களுக்கு ஒதுக்கப்பட்டதாக உள்ள போதிலும், ஆசிரியர்கள், பெற்றோர் மற்றும் சிறுவர்களுக்கு பாதுகாப்பை வழங்குகின்ற பெரியவர்களுக்கு, சிறுவர்கள் தொடர்பாக அவர்களுக்கு உள்ள சிக்கல்கள் மற்றும் சிறுவர்களை வளர்ப்பதில் உள்ள நடைமுறைகள் போன்றன பற்றி கலந்துரையாடுவதற்கும் இந்த சேவையை பயன்படுத்த முடியும்.

2015ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் 1929 இலங்கை சிறுவர் உதவித் தொலைபேசி சேவையூடாக 10087 முறைப்பாடுகள் அதிகாரசபைக்குக் கிடைத்துள்ளன. இதன் போது முறைப்பாடுகள் தொடர்பிலான விசாரணை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உரிய கோப்புகள் மூடப்பட்டுள்ள எண்ணிக்கை 4879 ஆகும். ஏனைய சகல முறைப்பாடுகள் தொடர்பிலும் ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகள் மற்றும் தலையீடுகள் செய்யப்படுகின்றன. இதன்போது விசாரணை நடவடிக்கைகள் குறுங்கால மற்றும் நீண்ட கால அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றன. 2015 ஆம் ஆண்டில் கிடைத்துள்ள சகல முறைப்பாடுகள் தொடர்பிலுமான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் குறித்த ஆண்டிலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**சிறுவர் துஷ்பிரயோகங்கள் பற்றி முறைப்பாடுகள்**

சிறுவர் துஷ்பிரயோகங்கள் பற்றிய முறைப்பாடுகள் தேசிய சிறுவர் அதிகாரசபைக்கு கிடைக்கும் பல்வேறு முறைகள் காணப்படுகின்றன. 1929 எனும் இலங்கை சிறுவர்

தொலைபேசி சேவை ஊடாக பெருமளவு முறைப்பாடுகள் வாய்மூலம் சமர்ப்பிக்கப்படுவதுடன், கடிதம் மூலமும் சிறுவர் துஷ்பிரயோகங்கள் பற்றிய முறைப்பாடுகள் தேசிய சிறுவர் அதிகார சபைக்குக் கிடைக்கின்றன. இவ்வாறு கிடைக்கின்ற அனைத்து முறைப்பாடுகளும் துரிதமாக விசாரிக்கப்படுவதுடன் முறைப்பாட்டின் தன்மைக்கமைய அவை வகைப்படுத்தப்படுகின்றன. 2015 ஆம் ஆண்டு சிறுவர் துஷ்பிரயோகம் பற்றிய 10732 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

| மாவட்டம் | கிடைத்துள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை |
|---|---|
| அம்பாறை | 246 |
| அநுராதபுரம் | 573 |
| பதுளை | 271 |
| மட்டக்களப்பு | 158 |
| கொழும்பு | 1522 |
| காலி | 700 |
| கம்பஹா | 1187 |
| ஹம்பாந்தோட்டை | 439 |
| யாழ்ப்பாணம் | 198 |
| களுத்துறை | 634 |
| கண்டி | 474 |
| கேகாலை | 404 |
| கிளிநொச்சி | 104 |
| குருநாகல் | 827 |
| மன்னார் | 65 |
| மாத்தளை | 222 |
| மாத்தறை | 389 |
| மொனராகலை | 241 |
| முல்லைத்தீவு | 121 |
| நுவரெலியா | 235 |
| பொலன்னறுவை | 302 |
| புத்தளம் | 540 |
| இரத்தினபுரி | 622 |
| திருகோணமலை | 130 |
| வவுனியா | 128 |
| மொத்தம் | **10732** |

**சட்டரீதியான பணிகள்**

1998 இன் 50 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டத்திற்கு அமைய, துஷ்பிரயோகத்திற்கு ஆளான சிறுவர்களை பாதுகாத்தல், அவர்களின் உரிமைகளை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல், சிறுவர் துஷ்பிரயோகங்களை ஒழிப்பதற்கான சட்டரீதியான, நிர்வாக அல்லது வேறு திருத்தங்களை சிபாரிசு செய்தல், சிறுவர் துஷ்பிரயோகங்கள் சம்பந்தமான சட்டங்களை அமுல்படுத்த ஆலோசனை வழங்குதல் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகங்கள் சம்பந்தமான சகல புலனாய்வுகள் மற்றும் குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளின் முன்னேற்றத்தை ஒழுங்குபடுத்தல் அது சம்பந்தமாக நீதிமன்றங்களில் ஆஜராதல் போன்ற பணிகள் சட்டப்பிரிவினால் நிறைவேற்றப்படுகின்றன. இதன்போது அதிகாரசபையின் சட்டத்திற்கு மேலதிகமாக, பின்வரும் சட்டங்களுக்கு ஏற்புடையவாறும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- 2005 ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க சுனாமி விசேட ஏற்பாடுகள் சட்டம்
- 2005 ஆம் ஆண்டின் 34ஆம் இலக்க வீட்டு வன்முறைகளை தடுப்பதற்கான சட்டம்

2015ஆம் ஆண்டில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையில் இயங்கிவருகின்ற சட்டப்பிரிவினால் சட்ட அலுவல்கள் பற்றிய ஆலோசனைகள் 2251 வழங்கப்பட்டுள்ளன. மேலும் நீதிமன்ற வழக்குகள் தொடர்பில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் இந்த அலகின் அலுவலர்கள் 69 தடவைகள் வழக்குகளில் ஆஜராகியுள்ளனர். அதிகாரசபைக்கு வெளியே நடைபெறுகின்ற 38 கூட்டங்களிலும் இந்த அலகின் அலுவலர்கள் பங்கேற்றுள்ளனர்.

**2015 ஆம் ஆண்டு சட்டப்பிரிவின் பங்களிப்பு வழங்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை (2005 இன் 16 ஆம் இலக்க சுனாமி விசேட ஏற்பாடுகள் சட்டத்துக்கு அமைய)**

| **நீதிமன்றம்** | **வழக்குகளின் எண்ணிக்கை** |
|---|---|
| பத்தரமுல்லை சிறுவர் நீதிமன்றம் | 11 |
| காலி நீதவான் நீதிமன்றம் | 03 |
| கல்முனை நீதவான் நீதிமன்றம் | 21 |
| பலபிட்டி நீதவான் நீதிமன்றம் | 04 |
| மாத்தறை நீதவான் நீதிமன்றம் | 02 |
| களுத்துறை நீதவான் நீதிமன்றம் | 01 |
| பத்தேகம நீதவான் நீதிமன்றம் | 01 |
| கங்கொடவில நீதவான் நீதிமன்றம் | 01 |
| | |
| ***மொத்தம்*** | **44** |

**2015 ஆம் ஆண்டு சட்டப்பிரிவின் பங்களிப்பு வழங்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை (சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்களுக்கு)**

| நீதிமன்றம் | வழக்குகளின் எண்ணிக்கை |
|---|---|
| உச்ச நீதிமன்றம் | 07 |
| பத்தரமுல்லை சிறுவர் நீதிமன்றம் | 04 |
| தெஹிஅத்தகண்டிய நீதவான் நீதிமன்றம் | 03 |
| களுத்துறை நீதவான் நீதிமன்றம் | 01 |
| கண்டி நீதவான் நீதிமன்றம் | 02 |
| கங்கொடவில நீதவான் நீதிமன்றம் | 05 |
| குருநாகல் நீதவான் நீதிமன்றம் | 02 |
| பலபிட்டி நீதவான் நீதிமன்றம் | 01 |
| தொழில் மன்று | 02 |
| | |
| ***மொத்தம்*** | **27** |

**சிறுவர் துஷ்பிரயோகத்தினால் பாதிக்கப்பட்டவர்களின் சாட்சிகளை வீடியோ ஒளிப்பதிவு செய்தல்**

சிறுவர் துஷ்பிரயோகங்கள் காரணமாக பாதிக்கப்படுகின்ற சிறுவர்களின் சாட்சிகளை வீடியோ காட்சிகளாக ஒளிப்பதிவு செய்வதற்கு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையில் விசேட அலகொன்று இயங்கிவருகின்றது. 1999ஆம் ஆண்டின் 32ஆம் இலக்க சாட்சிகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்திற்கு அமைய துஷ்பிரயோகத்திற்கு ஆளாகியிருக்கின்ற ஒரு சிறுவனின் சாட்சியை வீடியோ ஒளிப்பதிவு செய்து அதனை நீதிமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு இதன்மூலம் இடமளிக்கப்பட்டுள்ளது. 2015ஆம் ஆண்டில் இவ்வாறான 153 சாட்சிகள் ஒளிப்பதிவு செய்யப்பட்டுள்ளன.

**இணையத்தள கண்காணிப்பு அலகை அமுல்படுத்தல்**

எமது சமூகத்தில் இணையத்தள பயன்பாடு வளர்ச்சியடைந்ததையடுத்து அதன் மூலம் சிறுவர் துஷ்பிரயோகங்கள் இடம்பெறல் மற்றும் சிறுவர்கள் இணையத்தளத்தை தவறாகப் பயன்படுத்துவதும் காணக்கூடியதாக உள்ளது. 1998ஆம் ஆண்டின் 50ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டத்தின் 14(உ) பிரிவின் கீழ் சிறுவர் துஷ்பிரயோகங்களை தடுப்பதற்கான பணிக்கு தேவையான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளல் என்ற பிரிவு மற்றும் 40ஆம் பிரிவின் கீழ் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ள தண்டனைச் சட்டக்கோவையின் 286(அ), 345, 288(உ) ஆகிய பிரிவின் கீழ் சிறுவர்கள் தொடர்பாக மேற்கொள்ளப்படுகின்ற ஆபாச வெளியீடுகளை தடுத்தல் எனும் பிரிவுக்கு அமைய அவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றதா என்பதை

கண்காணிப்புச்செய்தல் மற்றும் கிடைக்கின்ற முறைப்பாடுகள் தொடர்பாக விசாரணை நடவடிக்கைகள் இந்தப் பிரிவின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றன. 2015 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் எண்ணிக்கை 21 ஆகும். இணையத்தளப் பாதுகாப்பு தொடர்பாக அறிவுறுத்தும் 22 நிகழ்ச்சித்திட்டங்கள் இந்த ஆண்டு நடாத்தப்பட்டன. பெரியவர்கள் 300 பேர், அலுவலர்கள் 540 பேர் மற்றும் சிறுவர்கள் 1950 பேர் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். அறிவுறுத்தப்பட்டுள்ள மொத்த எண்ணிக்கை 2790 ஆகும்.

**விசேட பொலிஸ் புலனாய்வு அலகு**

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு 1929 இலங்கை சிறுவர் உதவித் தொலைபேசிச் சேவை ஊடாகவும், வேறு வழிமுறைகளிலிருந்தும் பொதுமக்களிடம் கிடைக்கின்ற சிறுவர் துஷ்பிரயோகங்கள் பற்றிய சகல வகையிலான முறைப்பாடுகளை துரிதமாக விசாரித்து சட்டத்தை அமுல்படுத்துவதற்காக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையில் விசேட பொலிஸ் புலனாய்வு அலகொன்று செயற்பட்டு வருகின்றது. இந்த பிரிவு 24 மணிநேரமும் இயங்கிவரும் வகையில் அலுவலர் குழுவொன்று இந்த அலகிற்கு இணைப்புச் செய்யப்பட்டு சேவையாற்றி வருகின்றனர்.

**2015 ஆம் ஆண்டு விசேட பொலிஸ் புலனாய்வுப் பிரிவுக்கு நேரடியாகக் கிடைத்த முறைப்பாடுகள்**

| முறைப்பாட்டின் தன்மை | முறைப்பாடுகளின் எண்ணிக்கை | விசாரணையின் தற்போதைய நிலைமை (ஆரம்ப பொலிஸ் விசாரணை) | நீதிமன்றத்தில் விசாரிக்கப்படுகின்ற எண்ணிக்கை | நீதிமன்றத்தில் விசாரணை முடிந்துள்ளவை |
|---|---|---|---|---|
| சிறிய குற்றச் செயல்கள் | 43 | பூர்த்தி | 33 | - |
| பல்வேறு முறைப்பாடுகள் | 90 | பூர்த்தி | - | - |
| சிறுவர் குற்றச்செயல்கள் | 29 | பூர்த்தி | 29 | 09 |
| **மொத்தம்** | **162** | **-** | **62** | **09** |

**உளவியல், சமூக நிகழ்ச்சித்திட்டம்**

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையில் இயங்கி வருகின்ற உளவியல், சமூகப் பிரிவினால் சிறுவர் துஷ்பிரயோகங்கள் மற்றும் சிறுவர் உரிமை மீறல்கள் காரணமாக பாதிக்கப்படுகின்ற சிறுவர்களின் உளவியல் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்குத் தேவையான உளவியல் ஆலோசனை சேவைகளை வழங்குவது மற்றும் பல்வேறு நிகழ்ச்சிதிட்டங்கள் அமுல்படுத்தப்படுகின்றன. மாவட்ட உளவியல் சமூக அலுவலர்களினதும் உதவி இதற்கு வழங்கப்படுகின்றது. ஆலோசனை சேவை பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளன. 2015 ஆம் ஆண்டில் உளவியல் ஆலோசனை சேவைகள் 171

உம்,வீடியோ சாட்சிகளை பதிவுசெய்வதற்காக சிறுவர்களை ஆயத்தப்படுத்துவது 154 உம், உளவியல் சமூக உதவிகள் 368 உம், பல்வேறு விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் 28 உம், பாடசாலை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் 10 உம் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் 1929 சிறுவர் தொலைபேசி சேவை ஊடாக கிடைத்துள்ள புதிய முறைப்பாடுகளான 1218 தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளல். முறைப்பாடுகள் தொடர்பான பின்னாய்வு நடவடிக்கைகள் 1522 மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த ஆண்டு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் மாவட்ட மற்றும் பிரதேச அலுவலர்கள் போதைவஸ்து தொடர்பாக அறிவுறுத்தும் 2 நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தியுள்ளனர்.
அவ்வாறே, சுதந்திரமாக சிந்திக்கின்ற நிலைமையை சிறுவர்கள் மத்தியில் ஏற்படுத்தும் நோக்கதுடன், உளவியல் சமூக செயற்பாடுகள் அதிகாரசபையினால் அமுல்படுத்தப்படுகின்றன. பிள்ளைகளின் மத்தியில் ஆக்கபூர்வமான தன்மையை வளர்ப்பதற்கும் உளவியல் சமூக செயற்பாடுகளின்போது நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

**திரிதரு சுரக்கும் பியச வள நிலையம்**

திரிதரு சுரக்கும் பியச வள நிலையங்களைத் தாபிப்பதன் பிரதான நோக்கமாக இருப்பது பெற்றோர் வெளிநாடு செல்லல் மற்றும் பெற்றோர் இரண்டு பேரும் தொழிலுக்குச் செல்வதன் காரணமாக அநாதரவாக இருக்கின்ற சிறுவர்களுக்கு பாதுகாப்பைச் செய்து கொடுப்பதாகும்.

இவ்வாறான நிலையங்கள் தாபிக்கப்பட்டுள்ள பிரதேசங்கள்,

- குருநாகல் மாவட்டத்தின் இப்பாகமுவ பிரிதேச செயலாளர் பிரிவில் கிம்புல்வானாஓய குடியிருப்பில்,

- அநுராதபுரம் மாவட்டத்தின் கிழக்கு நுவரகம்பளாத பிரதேச செயலாளர் பிரிவுக்கு உரித்தான விஜயபுர குடியிருப்பு,

- புத்தளம் மாவட்டத்தின் கருவலகஸ்வெவ பிரதேச செயலாளர் பிரிவுக்கு உரித்தான புத்தி தியவர கிராமம்,

- அம்பாறை மாவட்டத்தின் கல்முனை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உரித்தான இஸ்லாமாபாத் சுனாமி வீடமைப்புத் திட்டத்தில் இவ்வாறு தாபிக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையங்களில் சேவை பெறுகின்ற சிறுவர்கள் மற்றும் அவர்களின் பெற்றோர், பாதுகாவலர்களுக்காக சிறுவர் துஷ்பிரயோகத்தை ஒழித்தல் மற்றும் சிறுவர் பாதுகாப்பு முறையியல்கள் பற்றி விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் சிறுவர்களுக்கான உளவியல் சமூக செயற்பாடுகள், ஆளுமை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள், அழகியற்கலை மற்றும் ரசணையை மேம்படுத்தும் செயற்பாடுகள் மற்றும் பரீட்சை செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட நிகழ்ச்சித்திட்டங்கள் போன்றன 2015 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்டன.






**சிறுவர்களை மையமாகக் கொண்ட நிலையங்கள்**

சிறுவர்களின் பாதுகாப்பிற்காக செயற்பட்டு வருகின்ற அரச மற்றும் அரசசார்பற்ற அமைப்புக்களை ஒருங்கணைப்புச் செய்தல் மற்றும் சிறுவர் ஆலோசனைச் சேவைகளை அமுல்படுத்துவதே இந்த சிறுவர் மைய நிலையங்களின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றது. 2009ஆம் ஆண்டில் முதலாவது சிறுவர் மைய நிலையம் வவுனியா மாவட்ட செயலக கட்டிடத்தொகுதியில் ஆரம்பித்து வைக்கப்பட்டதுடன் மாவட்ட செயலகங்களில் சிறுவர் மைய நிலையங்களைத் தாபிக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

தற்போது முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி, அம்பாந்தோட்டை, மன்னார் ஆகிய மாவட்டங்களிலும் சிறுவர் மைய நிலையங்கள் தாபிக்கப்பட்டுள்ளன.

## தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை
## 2015.12.31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டிற்கான வருமான செலவினக்கூற்று

(ரூபா)

| விபரம் | குறிப்பு | 2015 | 2014 சீராக்கல் செய்த கணக்குகள் | 2014 |
|---|---|---|---|---|
| *வருமானம்* | | | | |
| மீண்டுவரும் கொடை – திறைசேரி | | 235,370,000.00 | 152,072,000.00 | 152,072,000.00 |
| -ஏனைய நிறுவனங்கள் | 1 A | 10,785,633.18 | 40,299,670.42 | 40,299,670.42 |
| ஏனைய வருமானங்கள் | 1 B | 1,404,514,.46 | 15,066,291.86 | 13,409,595.27 |
| தேசிய செயற்றிட்டத்திற்கு திறைசேரியின் கொடை | | 47,000,000.00 | 29,000,000.00 | 29,000,000.00 |
| தேசிய சிறுவர் பாதுகாப்பு நிதியத்திற்கான கொடை | 1 C | 578,958.69 | 5,657,665.21 | 5,657,665.21 |
| *மொத்த வருமானம்* | | **295,139,106.33** | **242,095,627.49** | **240,438,930.90** |
| *செலவினம்* | | | | |
| நிருவாக செலவினம் | 2 | 215,628,638.10 | 140,911,234.74 | 138,089,588.65 |
| ஏனைய செயற்பாட்டுச்செலவினம் | 3 | 56,510,468.86 | 56,204,041.80 | 50,950,283.51 |
| கருத்திட்டச்செலவினம் | 4 | 13,316,523.93 | 34,844,190.67 | 34,844,190.67 |
| தேசிய சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் செலவினம் | 5 | 10,666,550.00 | 6,498,908.22 | 6,498,908.22 |
| நிதிச்செலவினம் | 6 | 28,910.50 | 6,236.00 | 6,236.00 |
| *மொத்த செலவினம்* | | **296,151,091.39** | **238,464,611.43** | **230,389,207.05** |
| *தேறிய மிகை / குறை* | 7 | **(1,011,985.06)** | **3,631,016.06** | **10,049,723.85** |

**தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை**
**2015.12.31 ஆம் திகதிக்கான நிதி நிலைமைக்கூற்று**

(ரூபா)

| விபரம் | குறிப்பு | 2015 | 2014 சீராக்கல் செய்த கணக்குகள் | 2014 |
|---|---|---|---|---|
| *சொத்துக்கள்* | | | | |
| *நடைமுறையல்லாச்சொத்துக்கள்* | | | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் | 8 | 94,509,420.04 | 94,354,036.18 | 94,354,036.18 |
| முதலீடும், சேமிப்பும் | 9 | 14,204,700.25 | 24,337,211.52 | 22,680,756.27 |
| நீண்டகால கிடைக்க வேண்டிய சொத்துக்கள் | 10 | 132,136.00 | 94,879.29 | 94,879.29 |
| | | **108,846,256.29** | **118,786,126.99** | **117,129,671.74** |
| *நடைமுறைச் சொத்துக்கள்* | | | | |
| பொருட்களின் இருப்பு - எழுதுகருவி | | 613,759.21 | 331,720.50 | 331,720.50 |
| இடர் கடன் | | 470,734.14 | 470,734.14 | 470,734.14 |
| கிடைக்க வேண்டிய கணக்குகள் | 11 | 41,122,861.18 | 33,853,830.16 | 37,422,273.91 |
| முற்பணக் கொடுப்பனவு | 12 | 510,399.98 | 515,918.92 | 515,918.92 |
| காசும், காசுக்கு சமமானவையும் | 13 | 23,697,526.73 | 7,976,093.45 | 7,976,093.45 |
| | | **66,415,281.24** | **43,148,297.17** | **46,716,740.92** |
| *மொத்த சொத்துக்கள்* | | **175,261,537.53** | **161,934,424.16** | **163,846,412.66** |
| *பொறுப்புக்கள்* | | | | |
| *நடைமுறையல்லாப் பொறுப்புக்கள்* | | | | |
| ஓய்வூதியப் பணிக்கொடை | | 6,002,385.96 | 4,707,374.00 | 2,386,146.75 |
| வரையறுக்கப்பட்ட நிதி | 14 | 465,404.00 | 465,404.00 | 465,404.00 |
| கருத்திட்ட மிகை அல்லது குறை | 15-A | 14,647,830.15 | 17,033,298.10 | 17,033,298.10 |
| தேசிய சிறுவர் பாதுகாப்பு நிதியம் | 15-B | (10,559,826.63) | (697,085.32) | ( 697,085.32 ) |
| | | **10,555,793.48** | **21,508,990.78** | **19,187,763.53** |
| *நடைமுறைப் பொறுப்புக்கள்* | | | | |
| நின்ற கணக்குகள் | 16 | 21,762,942.20 | 18,362,770.53 | 16,177,278.49 |
| குறுங்கால ஏற்பாடுகள் | 17 | 1,137,611.14 | 1,049,969.14 | 1,049,969.14 |
| | | **22,900,553.34** | **19,412,739.67** | **17,227,247.63** |
| *மொத்த பொறுப்புக்கள்* | | **33,456,346.82** | **40,921,730.45** | **36,415,011.16** |
| *தேறிய சொத்துக்கள்* | | **141,805,190.71** | **121,012,693.71** | **127,431,401.50** |
| *நிதியீட்டல்* | | | | |
| மூலதனக் கொடைகள் | 18 | 150,542,976.54 | 141,356,976.54 | 141,356,976.54 |
| மூலதன ஒதுக்கம் | | 2,153,119.00 | 2,153,119.00 | 2,153,119.00 |
| மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | | 13,000,000.00 | 13,000,000.00 | 13,000,000.00 |
| தடுத்துவைக்கப்பட்ட உழைப்புக்கள் | | (23,890,904.83) | (35,497,401.83) | ( 29,078,694.04 ) |
| | | **141,805,190.71** | **121,012,693.71** | **127,431,401.50** |

**தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை**
**2015.12.31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டிற்கான காசோட்டக்கூற்று**

(ரூபா)

| விபரம் | குறிப்பு | 2015 | 2014 சீராக்கல் செய்த கணக்குகள் | 2014 |
|---|---|---|---|---|
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசோட்டம்** | | | | |
| பொதுவான செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மிகை/(குறை) | | (1,011,985.06) | 3,631,016.06 | 10,049,723.85 |
| **காசல்லாத மாற்றங்கள்** | | | | |
| தேய்மானம் | 8 | 10,141,621.62 | 8,934,820.88 | 8,934,820.88 |
| வாகனம் விற்பனையிலிருந்தான இலாபம்/(நட்டம்) | | - | 345,550.00 | 345,550.00 |
| செலுத்த வேண்டிய கணக்குகளின் அதிகரிப்பு | | 5,585,663.71 | 6,860,993.71 | 4,675,501.67 |
| குறுங்கால ஒதுக்கங்களின் அதிகரிப்பு | | 87,642.00 | 87,642.00 | 87,642.00 |
| இருப்பு அதிகரிப்பு | | (282,038.71) | (146,730.13) | (146,730.13) |
| கிடைக்க வேண்டிய கணக்குகளின் அதிகரிப்பு | | (3,700,587.27) | (10,917,089.36) | (14,485,533.11) |
| முன்செலுத்தல்களின் அதிகரிப்பு | | 5,518.94 | 111,789.13 | 111,789.13 |
| இடர் கடன் அதிகரிப்பு | | - | - | - |
| தடுத்துவைத்த உழைப்புக்களின் அதிகரிப்பு / குறைவு | | (6,048,434.99) | 360,446.53 | 360,446.53 |
| பணிக்கொடைப் பங்களிப்பு | | 3,616,239.21 | - | - |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசோட்டம்** | | **8,393,639.45** | **9,268,438.82** | **9,933,210.82** |
| **முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான காசோட்டம்** | | | | |
| நிலையான சொத்துக் கொள்வனவு | | (10,297,005.48) | (13,313,025.20) | (13,313,025.20) |
| நிலையான சொத்து விற்பனை | | - | 1,999,450.00 | 1,999,450.00 |
| நீண்டகால கிடைக்க வேண்டிய கணக்குகளின் அதிகரிப்பு | | (37,256.71) | 144,910.59 | 144,910.59 |
| மீள்மதிப்பீட்டு ஒதுக்கத்தின் அதிகரிப்பு | | - | - | - |
| முதலீட்டுப் பயன்கள் | | 8,476,056.02 | (103,684.47) | 1,552,770.78 |
| **முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசோட்டம்** | | **(1,858,206.17)** | **(11,272,349.08)** | **(9,615,893.83)** |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசோட்டம்** | | | | |
| பணிக்கொடை ஒதுக்கங்களின் அதிகரிப்பு | | - | 2,087,872.13 | (233,355.12) |
| வரையறுக்கப்பட்ட நிதியங்களின் அதிகரிப்பு / குறைவு | | - | (63,000.00) | (63,000.00) |
| மூலதனக் கொடைகளின் பெறுகைகள் | | 9,186,000.00 | 7,100,550.00 | 7,100,550.00 |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசோட்டம்** | | **9,186,000.00** | **9,125,422.13** | **6,804,194.88** |
| காசும், காசுக்குச் சமமானவைகளினதும் தேறிய குறைவு | | 15,721,433.28 | 7,121,511.87 | 7,121,511.87 |
| ஆரம்ப காசும் காசுக்குச் சமமானவைகளும் | | 7,976,093.45 | 854,581.58 | 854,581.58 |
| **ஆண்டின் இறுதியில் காசும், காசுக்கு சமமானவையும்** | 13 | **23,697,526.73** | **7,976,093.45** | **7,976,093.45** |

මගේ අංකය
எனது இல. } வீரிவை/சீ/என்சீபீஏ/2015/01/05
My No.

ඔබේ අංකය
உமது இல. }
Your No.

දිනය
திகதி }
Date

2017 மார்ச் 13

தலைவர்,
தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை

**தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.**

---

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) பிரிவு மற்றும் 1998 இன் 50 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 22(2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் ஒரு விபரமான அறிக்கை அதிகாரசபையின் தலைவருக்கு 2017 சனவரி 19 ஆம் திகதி வழங்கப்பட்டது.

**1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

1.3 **கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக் கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக் கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

1.4 **முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2 நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 07**

நடைமுறையல்லாத சொத்துக்களுக்கான பயன்படு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாததன் காரணமாக ரூபா 74,943,183 கிரயமான நிலையான சொத்துக்கள் முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்த போதும் தொடர்ந்தும் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டு வருகின்றன. அதன் பிரகாரம் மதிப்பீட்டு வழுவை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் திருப்தியமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 08**

2010 ஆகஸ்ட் 25 ஆந் திகதி வேலை இடைநிறுத்தப்பட்ட அதிகாரசபையின் கணக்காளருக்கு எதிராக நீதிவான் நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு வரும் வழக்கின் தீர்மானத்தின் பிரகாரம் அவர் மீண்டும் சேவைக்கு வருகை தந்தால் செலுத்த வேண்டிய சம்பளம், பணிக்கொடை மற்றும் இழப்பீடு தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(இ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03**

(i) நியமத்தின் 12 ஆம் இலக்க பந்தியின் பிரகாரம் அரச மானியங்களின் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களை பெறுமானத்தேய்வு செய்வதற்கு இணைவாக அரச மானியங்களை காலக்கழிவு செய்யும் கொள்கையொன்று பின்பற்றப்படாதிருந்தமையால் மீளாய்வாண்டின் இறுதியளவில் அதிகாரசபைக்கு சொத்துக்களை கொள்வனவு செய்வதற்கு வழங்கப்பட்டிருந்த அரசின் மூலதன மானியங்களின் பெறுமதி ரூபா 150 மில்லியனாக இருந்த போதிலும், அதனைப் பிரதிநிதித்துவப்படுத்திய தேறிய சொத்துக்களின் பெறுமதி ரூபா 94.5 ஆக இருந்தது.

(ii) நியமத்தின் 12 ஆம் இலக்க பந்தியின் பிரகாரம் கடன் கொடுப்பனவு கொள்கை தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(இ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07**

நிதி அசைவிற்கு தாக்மொன்றல்லாத மானியமாக பொதுத் திறைசேரியிலிருந்து கிடைத்த ரூபா 5,795,000 பெறுமதியான மோட்டார் வாகனத்தின் பெறுமதி தவறுதலாக காசுப்பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 1,068,554 பெறுமதியான தளபாடங்கள் நடைமுறையல்லாத சொத்துக்களாக கணக்கீடு செய்யப்படாமையால் ரூபா 160,283 பெறுமானத்தேய்வு குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்குரிய ரூபா 251,829 கூட்டுத்தொகையான அட்டுறு செலவினம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) ஊடகத்துறை மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சிற்கு இணைக்கப்பட்டிருந்த உத்தியோகத்தரொருவருக்காக 2014 மற்றும் 2015

ஆண்டுகளின் போது அதிகாரசபையால் செலுத்தப்பட்டிருந்த ரூபா 542,945 ஆன சம்பளம் அறவிடப்பட வேண்டிய போதிலும், அப்பணம் கிடைக்க வேண்டிய தொகையொன்றாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் கிராமிய சிவில் சமூகத்தை அறிவூட்டும் நிகழ்ச்சிகளை நடாத்துவதற்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 7,292,500 ஆன முற்பணத் தொகையில் மீளாய்வாண்டிற்குரிய செலவினம் ரூபா 6,413,119 ஆக இருந்த போதிலும், ரூபா 5,201,827 மாத்திரம் தீர்வு செய்யப்பட்டதாக கணக்கீடு செய்தமையால் மீளாய்வாண்டிற்குரிய செலவினம் ரூபா 1,211,292 குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிதது.

### 2.2.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை மற்றும் சிறுவர் பாதுகாப்பு நிதியம் என்பவற்றிற்கிடையே மேற்கொள்ளப்படுகின்ற கொடுக்கல் வாங்கல்களைப் சிக்கலான வகையில் கணக்குகளில் பதிவுசெய்வதால் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் அதிகாரசபைக்கு, நிதியத்திலிருந்து கிடைக்க வேண்டிய மீதி ரூபா 5,889,373 தொகை கூடுதலாகவும் அதிகாரசபையிலிருந்து நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய மீதி ரூபா 3,236,982 தொகை குறைவாகவும் காண்பிக்கப்பட்டிருந்தன.

### 2.2.4 போதியளவு அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

2012 நவம்பர் 29 ஆந் திகதி 131/02 ஆம் இலக்க பணிப்பாளர் சபை பத்திரத்தின் மூலம் சுனாமியால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளுக்காக ஆரம்பிக்கப்பட்டிருந்த சேமிப்புக் கணக்கொன்றில் இருந்த ரூபா 15,000,000 தொகையை நிலையான வைப்புக் கணக்கொன்றில் வைப்புச் செய்வதற்கும் அதன் வட்டியை உதவிக் கொடுப்பனவுகளை வழங்குவதற்காகவும் பயன்படுத்துவதற்கு பணிப்பாளர் சபை அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது, எனினும் பணிப்பாளர் சபை அங்கீகாரமொன்றில்லாமல் மேற்குறித்த கணக்கை இல்லாமல் செய்து அத்தொகை மற்றும் வட்டி உட்பட மொத்தம் ரூபா 19,138,794 ஐ சேமிப்புக் கணக்கொன்றில் செலவு வைக்கப்பட்டிருந்தது.

**2.3 பெறவேண்டிய கணக்குகள்**

நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் நடைமுறையல்லாத பொறுப்புக்களாக காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 4,688,717 தொகையான 6 செயற்திட்ட கணக்குகளின் மீதிகள் தீர்வுசெய்யப்படாமல் முன்கொண்டு வரப்பட்டிருந்தன.

**2.4 சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
| --- | --- |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | |
| (i) நிதிப் பிரமாணம் 104 | மீளாய்வாண்டின் போது இடம்பெற்ற 3 வாகன விபத்துக்கள் தொடர்பாக ஆரம்ப பரிசோதனைகளை நடாத்தி ஆரம்ப அறிக்கை மற்றும் முழுமையான அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப் பிரமாணம் 135 | மீளாய்வாண்டின் போது அதிகாரசபையினால் பணக் கொடுப்பனவு மற்றும் பணக் கையேற்றல் என்பவற்றிற்குரிய நிதி அதிகாரங்கள் மற்றும் கடமைக் கையளிப்பொன்று எழுத்துமூலம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (iii) நிதிப் பிரமாணம் 184 | ரூபா 153,678 ஆன பெறுவனவுகளுக்காக பற்றுச்சீட்டுக்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| (iv) நிதிப்பிரமாணம் 177(1) | ரூபா 11,030 கூட்டுத்தொகையான பணப் பெறுவனவுகள் 02 வாரங்கள் முதல் 7 மாதங்களுக்கிடையிலான காலதாமதத்துடன் வங்கியிலிடப்பட்டிருந்தன. |
| (v) நிதிப்பிரமாணம் 264 | ஒவ்வொரு கொடுப்பனவொன்றின் போதும் பணத்தைப் பெற்றுக்கொண்டமைக்காக பெறுவோனிடமிருந்து உறுதிப்படுத்தலொன்று பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய போதிலும், |

| | | |
|---|---|---|
| | | பிரதேச மற்றும் மாவட்ட செயலகங்களுக்கு மீளாய்வாண்டின் போது அனுப்பிய ரூபா 26,816,190 ஆன முற்பணத்திற்காக அவ்வாறு உறுதிப்படுத்தலொன்று பெற்றுக்கொள்ளப் பட்டிருக்கவில்லை. |
| (vi) | நிதிப்பிரமாணம் 371(2)(இ) | மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட ரூபா 20,180,052 ஆன தீர்வுசெய்யப்படாத முற்பணங்களில் ரூபா 9,503,682 தொகை முன்னைய ஆண்டுகளுக்குரியதாக இருந்தன. |
| (vii) | நிதிப்பிரமாணம் 751 | கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களுக்காக கொடுப்பனவு செய்யும் போது பொருள் பெறுவனவு கட்டளைகள், கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களுடன் இணைக்கப்பட வேண்டிய போதிலும், 10 உறுதிச்சீட்டுக்கள் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 3,427,008 கூட்டுத்தொகையான பொருட்களுக்காக அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (viii) | நிதிப்பிரமாணம் 757(2) | மீளாய்வாண்டின் இறுதியில் அதிகாரசபைக்குச் சொந்தமாக காணப்பட்ட ரூபா 94,509,420 பெறுமதியான நிலையான சொத்துக்களுக்குரிய பொருள் மெய்மையாய்வு அறிக்கை 2014 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2014 திசெம்பர் 26 ஆந் திகதிய பீஆர்ஈ/2015/4சீ ஆம் இலக்க தேர்தல்கள் ஆணையாளரின் கடிதம் | தேர்தல்கள் காலத்தில் நியமனங்கள் வழங்கப்படக் கூடாத போதிலும், 2015 சனவரி 09 ஆந் திகதி அதிகாரசபையின் உதவி முகாமையாளர் (சட்ட அமுலாக்கல்) ஆக சட்ட உதவியாளர் iii தரத்தின் உத்தியோகத்தரொருவர் நியமிக்கப்பட்டிருந்தார். |

## 3. நிதி மீளாய்வு

### 3.1. நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான அதிகாரசபையின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் நிதி விளைவுகள் ரூபா 1,011,985 பற்றாக்குறையொன்றாக இருந்ததுடன், இதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 3,631,016 ஆகக் காணப்பட்டமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 4,643,001 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. நிர்வாகச் செலவினம் அதிகரித்தமை மற்றும் ஏனைய வருமானம் குறைவடைந்தமை நிதி விளைவுகளின் வீழ்ச்சிக்கு பிரதான தாக்கமளித்திருந்தன.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 4 ஆண்டுகளின் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது அதிகாரசபையின் 2011 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 6,826,677 தொகை மற்றும் ரூபா 3,631,016 ஆன மிகையொன்றும் 2012, 2013 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 12,058,337, ரூபா 1,302,856 மற்றும் ரூபா 1,011,985 என பற்றாக்குறையும் அவதானிக்கப்பட்டன. எவ்வாறாயினும் ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாத சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றை கருத்திற் கொள்ளும் போது 2011 ஆம் ஆண்டில் ரூபா 45,237,873 தொகையான பங்களிப்பு மீளாய்வாண்டு வரை ரூபா 219,958,470 வரையான சாதகமான அதிகரிப்பொன்றைக் காட்டியிருந்தது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் தேறிய சொத்துக்களின் பெறுமதி ரூபா 141,805,191 ஆக இருந்ததுடன், அது முன்னைய ஆண்டின் தேறிய சொத்துக்களான ரூபா 121,012,694 உடன் ஒப்பிடும் போது ரூபா 20,792,497 அதாவது 17 சதவீத அதிகரிப்பொன்றாகும். மீளாய்வாண்டின் தொழிற்படு மூலதனம் ரூபா 43,514,727 ஆக இருந்ததுடன், இது முன்னைய ஆண்டின் தொழிற்படு மூலதனமான ரூபா 23,735,557 உடன் ஒப்பிடுகையில் ரூபா 19,779,170 அதாவது 83 சதவீத அதிகரிப்பொன்றாகும். இவ்வாறு தொழிற்படு மூலதனம் அசாதாரணமாக அதிகரிப்பதற்கு தீர்க்கப்படாத முற்பண மீதிகளின் அதிகரிப்பு தாக்கமளித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

------------------------------------

### 4.1 செயலாற்றல்

-------------------

1998 இன் 50 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் சிறுவர் துஷ்பிரயோகங்களை தவிர்த்தலும் அவ்வாறான துஷ்பிரயோகங்களுக்கு உட்பட்ட சிறுவர்களைப் பாதுகாத்தல் மற்றும் அவர்களுக்கு சிகிச்சையளிக்கும் பொருட்டு தேசிய கொள்கையொன்றை தயாரிப்பதும் அதனை செயற்திறனாக அமுல்படுத்துவதற்காக தேவையான சட்டரீதியானதும் நிர்வாக ரீதியானதுமான திருத்தங்களைப் பரிந்துரை செய்வதும் அவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக தேவையான அனைத்து நடவடிக்கைகளை எடுப்பதும் அறிவூட்டுவதற்கும் சட்டத்தை செயற்படுத்துவதனை ஒழுங்குபடுத்துவதும் புலனாய்வு மற்றும் குற்ற வழக்கு நடவடிக்கைகள் தொடர்பாக செயன்முன்னேற்றத்தை ஒழுங்குபடுத்துவதும் அதிகாரசபையின் பிரதான செயற்பாடுகளாக இருந்தன.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் ''வீட்டிலுள்ள சிறுவர்களை அவசர விபத்துக்களிலிருந்து தவிர்ப்போம்'' என்ற தலைப்பில் சமூக ஈடுபாடு மற்றும் சிறுவர் இல்லங்களைக் கண்காணித்தல் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்காக செயலகங்களுக்கு 208 சிறுவர் இல்லங்களுக்காக ஒன்றுக்கு ரூபா 9,700 வீதம் ரூபா 2,017,600 கொடுப்பனவு செய்யப்பபட்டிருந்ததுடன், அதில் ரூபா 578,976 தொகை செலவிடப்படாமல் மீள அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. ரூபா 1,438,624 செலவு செய்து நடாத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் சிறுவர் இல்லங்களின் நிலைமை தொடர்பான அறிக்கைகளைப் பெற்றுக்கொண்டு அவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்து எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சிறுவர் துஷ்பிரயோகம் பெண்கள் இம்சைப்படுத்துவதை தடுப்பது தொடர்பான நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்காக அமைச்சினால் வழங்கப்பட்டிருந்த ரூபா 12 மில்லியனில் முற்பணமாக வழங்கப்பட்டிருந்த ரூபா 1.28 மில்லியன் தீர்க்கப்படாதிருந்ததுடன் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தப்பட்டமைக்கான உறுதிப்படுத்தல்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) சிவில் சமூக அங்கத்தவர்களை அறிவூட்டும் 197 நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்காக 186 மாவட்ட / பிரதேச உத்தியோகத்தர்களுக்கு ரூபா 4,432,500 தொகை முற்பணமாக வழங்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் 66 செயலகங்களினால் மாத்திரம் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டமைக்கு முற்பணங்கள் தீர்க்கப்பட்டிருந்தன. அது எதிர்பார்க்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களில் 33 சதவீதமாகும். 18 நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்காக 14 மாவட்ட / பிரதேச செயலகங்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 405,000 தொகை உரிய செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சிறுவர் பாதுகாப்பு கிராமங்களை அறிவூட்டுவதற்காக 14 பிரதேச செயலகங்களுக்கு ரூபா 10,000 வீதம் வழங்கப்பட்ட ரூபா 140,000 தொகை நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்படாமையால் மீள அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

(உ) 2011 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை அதிகாரசபைக்கு கிடைக்கப் பெற்றிருந்த 47164 முறைப்பாடுகளில் தீர்வு செய்யப்படாது மீளாய்வாண்டின் இறுதி வரை முன்கொண்டு வரப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை 17,604 ஆக இருந்தது. அதிகாரசபைக்கு வருடாந்தம் கிடைக்கும் முறைப்பாடுகளில் மட்டுப்படுத்தப்பட்ட அளவொன்று மாத்திரம் அவ்வாண்டில் தீர்வு செய்வதற்கும், பிரதேச மற்றும் மாவட்ட உத்தியோகத்தர்கள் முறைப்பாடுகளுக்கு தொடர்பாக தகவல்களை சேர்த்து அறிக்கையிடல், தகவல்களைக் கோருதல் மற்றும் புலனாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பாக முறையான கண்காணிப்பொன்று மேற்கொள்ளப்படாமையால் தீர்வு செய்யப்படாத முறைப்பாடுகளின் எண்ணிக்கை துரிதமாக அதிகரிப்பதற்கு காரணங்களாக இருந்தன.

## 4.2 முகாமைத்துவ செயற்திறமையீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆராய்ச்சிகளையும் கற்கைகளையும் மேற்கொள்வதற்காக 2013 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை ரூபா 8.3 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 3.43 மில்லியன் செலவு செய்து சிறுவர் கல்வி பாதுகாப்பிற்காக உள்ள மேவுகையொன்றும் பாடசாலைகளில் ஆலோசனை சேவை வழங்கல் நிலைமையை ஆய்வு செய்வது தொடர்பாக ஆராய்ச்சியொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2013 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டிருந்த

அந்த ஆராய்ச்சி அறிக்கைகளிலிருந்து 500 புத்தகங்கள் ரூபா 194,556 தொகை செலவு செய்து மீளாய்வாண்டின் போது அச்சிடப்பட்டிருந்ததுடன், 06 மாதங்களுக்குப் பின்னர் 370 புத்தகங்கள் மாத்திரம் 06 நிறுவனங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது. மேலும் அந்த அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் சுனாமி பிள்ளைகளுக்கு வழங்குவதற்காக கிடைக்கப்பெற்றிருந்த ரூபா 555,524 தொகை நலனாளி பிள்ளைகளுக்கு கொடுப்பனவு செய்யப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன், மாதாந்தம் ரூபா 2,000 கொடுப்பனவு செய்வதற்காக கிடைத்த ரூபா 144,000 இற்குரிய நலனாளி பிள்ளைகளை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.3 வாகனப் பயன்பாடு

அதிகாரசபைக்கு பொது திறைசேரியிடமிருந்து கிடைத்த ரூபா 7,550,000 பெறுமதியான பேருந்து 2014 முதல் 2016 வரையான இரண்டு ஆண்டுகளில் 10989 கிலோ மீற்றர் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. அதிகாரசபையின் தேவைப்பாட்டிற்கு பொருத்தமில்லாத இந்த வாகனம் குறைப்பயன்பாட்டிற்கு உட்பட்டு காணப்பட்டது.

### 4.4 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு அதிகாரசபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணியினர் முறையே 522 ஆகவும் 405 ஆகவும் இருந்தமையால் 117 பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டதுடன், அதில் 105 பிரதேச சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்களாக இருந்தனர். எவ்வாறாயினும் இப்பதவியில் தற்போது சேவையிலுள்ள 255 உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்படுகின்ற செயலாற்றல் தொடர்பாக முறையான கண்காணிப்பொன்று இடம்பெற்றிருக்கிவல்லை.

(ஆ) அத்தியவசிய சிரேஷ்ட நிலையில் 2 பிரதான பதவிகளான பிரதி பொது முகாமையாளர் மற்றும் திட்டமிடல் மற்றும் தகவல் முகாமையாளர் பதவிகள் வெற்றிடங்களாக காணப்பட்டமை திட்டமிடல் செயற்படுத்தல் மற்றும் மேற்பார்வை என்பன முறைப்படி மேற்கொள்ளாமைக்கு காரணங்களாக இருந்தன.

(இ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உதவி முகாமையாளர் (நிகழ்ச்சித்திட்டம்) பதவிக்காக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட உத்தியோகத்தரின் நியமனத் திகதியான 2007 யூலை 01 முதல் 2016 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலாமான்று வேறொரு நிறுவனமொன்றுக்கு சேவைக்காக விடுவிக்கப்பட்டமையால் உதவி முகாமையாளர் (நிகழ்ச்சித்திட்டம்) பதவியின் சேவையை அதிகாரசபைக்கு பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர் பதவிக்காக நியமிப்பதற்கு முகாமைத்துவ மட்டத்தின் மத்திய 1 ஆம் தரத்தில் 5 ஆண்டு அனுபவமோ அல்லது பட்டம் அல்லது பட்டப்பின் படிப்புடன் 12 வருட முகாமைத்துவ நிலையில் அனுபவமொன்று இருக்க வேண்டிய போதிலும், தகைமையைக் கொண்டிராத உதவி மாவட்ட பதவியில் உத்தியோகத்தரொருவர் அப்பதவிக்கு நியமனம் செய்யப்பட்டிருந்தார்.

(உ) தெரிவுப் பரிசோதனையின் பிரகாரம் தனிப்பட்ட கோவைகள் நீண்டகாலமாக முறையாக பராமரிக்கப்படாமல் குறைபாடுடையதாக இருந்ததுடன், தொழிலுக்காக விண்ணப்பமொன்றை சமர்ப்பிக்காத சந்தர்ப்பமொன்று மற்றும் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டதன் பின்னர் மருத்துவ பரிசோதனை அறிக்கை சமர்ப்பித்தல் 06 மாதங்கள் முதல் 04 ஆண்டுகள் வரை தாமதமாகிய 3 சந்தர்ப்பங்களும், கல்விச் சான்றிதழ்கள் தாமதமாக உறுதிப்படுத்தப்பட்டிருந்த 02 சந்தர்ப்பங்களும், அச்சான்றிதழ்கள் உறுதிப்படுத்தப்படாத சந்தர்ப்பமொன்றும் அதிகாரசபையிலிருந்து விலகிச் சென்ற உத்தியோகத்தரொருவர் அவர் பொறுப்பில் காணப்பட்ட பொருட்களை அல்லது பெற்றுக்கொண்ட முற்பணத்தொகை மற்றும் ஆவணங்களை கையளிக்காத சந்தர்ப்பமொன்றும் இருந்தது.

(ஊ) வினைத்திறன் தடைகாண் பரீட்சைகளை நடாத்தாமல் சம்பள ஏற்றங்கள் கொடுப்பனவு மற்றும் சேவையில் நிரந்தரம் என்பன மேற்கொள்ளப்பட்டிருந்தன.

**4.5 வெளிப்படையான மோசடிகள்**

-----------------------------------------------------

முற்பணமாகப் பெற்றுக்கொண்ட ரூபா 31,500 தொகை மற்றும் ரூபா 20,300 தொகை என்பவற்றை தீர்ப்பதற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த பட்டியல்களின் இலக்கம் மாற்றப்பட்டு ரூபா 9,000 கூடுதலாக பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

## 4.6 நிதியத்தின் குறைப் பயன்பாடு

இலங்கை வங்கியில் பேணிச் சென்ற ரூபா 159,397 பெறுமதியான இரண்டு நடைமுறைக் கணக்கு மீதிகள், 4 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக விளைவற்றுக் காணப்பட்டன.

## 4.7 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 இன் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் சிறுவர் தினக் கொண்டாட்டங்களுக்காக ரூபா 2.96 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது ன் அதற்காக 3.94 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. இப்பணத்தில் பயனுள்ள செயற்பாடொன்றில் ஈடுபடுத்தக்கூடியதாக இருந்த ரூபா 1.44 மில்லியன் தொகை பத்திரிகை விளம்பரங்களுக்காக செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) வரிசை அமைச்சினதும் சிறுவர் அலுவல்கள் இராஜாங்க அமைச்சினதும் கேட்போர் கூடத்தை பயன்படுத்த முடியுமாக இருந்த போதும் ரூபா 336,446 தொகை செலவு செய்து உலக சிறுவர் தினத்தை கொண்டாடுவதற்கான சிறுவர் பாதுகாப்பு தொடர்பாக மாநாடொன்று 2015 ஒக்தோபர் 08 ஆந் திகதி 52 பேர் பங்குபற்றலுடன் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு வளவில் "மிஹிலக்க மதுர" நடாத்திச் செல்லப்பட்டிருந்ததுடன் மண்டபக் கட்டணமாக ரூபா 108,346 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 5. கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்

## 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதி பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் பிரகாரம் அதிகாரசபையால் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்களை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் 2016 செப்தம்பர் 01 ஆந் திகதி அதாவது 06 மாதங்கள் தாமதத்தின் பின்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

**5.2 கூட்டிணைந்த திட்டம்**

அதிகாரசபையின் செயற்பாடுகள் தொடர்பாக 2012-2017 வரை கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் பிரகாரம், கூட்டிணைந்த திட்டத்தில் உள்ளடக்கப்படும் வகையில் ஒவ்வொரு நிகழ்ச்சித்திட்டத்தினதும் நோக்கங்களை அடைந்துகொள்ளும் இலக்கு மற்றும் குறிப்பான காலப்பகுதி என்பன இனங்காணப்படாதிருந்தமையால் அது செயல்நடவடிக்கைத் திட்டத்துடன் தொடர்புபடுத்தப்பட்டு நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத நிலையில் காணப்பட்டது.

**5.3 உள்ளகக் கணக்காய்வு**

2009 யூன் 09 ஆம் திகதிய டிஎம்ஏ/2009(1) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றறிக்கையின் 7 ஆம் பந்தியின் பிரகாரம் வருடாந்த கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டங்களைத் தயாரிக்கும் போது வருடாந்த மதிப்பீடு, செயல்நடவடிக்கைத் திட்டம், புதிய பாதீட்டு முன்மொழிவுகள், வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்கள் போன்ற அதிகாரசபையின் அனைத்துப் பிரிவுகள் தொடர்பாகவும் கருத்திற்கொண்டு அனைத்து பிரிவுகளினதும் நடவடிக்கைகளை மேவுகை செய்யப்படும் வகையில் ஒவ்வொரு ஆண்டின் ஜனவரி 31 ஆந் திகதிக்கு முன்னர் தமது கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டியிருந்ததுடன் அதன் பிரதி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கும் கணக்காய்வு தலைமை அதிபதிக்கும் சமர்ப்பிக்கப்படவேண்டும். எவ்வாறாயினும் சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் 2014 யூலை மாதம் முதல் 2015 ஒக்தோபர் 15 ஆந் திகதி வரை உள்ளகக் கணக்காய்வாளரொருவர் இணைக்கப்படாததன் காரணமாக உள்ளக கணக்காய்வொன்று மேற்கொள்ளப்படாதிருந்ததுடன், வரிசை அமைச்சினாலும் உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**5.4 கணக்காய்வுக் குழு**

2003 யூன் 02 ஆம் திகதிய PED/12 ஆம் இலக்க நல்லாளுகை தொடர்பான பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.1 ஆம் பிரிவின் பிரகாரம் குறைந்தது 03 மாதங்களுக்கு ஒரு தடவை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டம் நடாத்தப்பட வேண்டிய போதிலும், 2015 ஆம் ஆண்டிற்காக 02 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன.

### 5.5 பெறுகைகள் திட்டம்

2006 ஜனவரி 25 ஆந் திகதிய 08 ஆம் இலக்க அரசின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2 ஆம் பந்தியின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது அதிகாரசபையின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகளும் கட்டுப்பாட்டுத் துறைகளும் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) கணக்கீடு | அட்டுறுச் செலவினங்களை சீராக்குதல், பெறுமானத்தேய்வு ஒதுக்கீடு, நாட்குறிப்பு பதிவுகளை இடுதல் என்பன முறையாக மேற்கொள்ளப்படாமை. |
| (ஆ) முற்பணக் கட்டுப்பாடு | முற்பணம் வழங்கல் மற்றும் தீர்வு செய்தல் முறையான கட்டுப்பாடொன்றுடன் மேற்கொள்ளப்படாமை |
| (இ) செயற்பாட்டுக் கட்டுப்பாடு | முறைப்பாடுகளுக்காக தீர்வு வழங்குவதில் தாமதமங்கள் மற்றும் நடாத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான செயன் முன்னேற்றங்கள், பின்தொடர் நடவடிக்கைகள் மற்றும் மேற்பார்வையொன்று செய்யப்படாமை. |
| (ஈ) திட்டங்களைச் செயற்படுத்தல் | நிகழ்ச்சித்திட்டங்களை முறைப்படி திட்டமிடாமை மற்றும் அமுல்படுத்துவதில் தாமதம் காணப்பட்டமை |

ஒப்பம்: எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

ஒப்பம்./எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி